திராவிடநாடு

7—7—57 | வார வெளியீடு | விலை 0—2—6



சிக்கனச்சிந்து பாடுகிறது, காங்கிரஸ் சர்க்கார்! ஆனால், சிக்கனம் செய்யவேண்டிய இடங்கள், பணம்பெறுவதற்கான இடங்கள் எப்படியுள்ளன என்று திகைக்கிறான் ஏழை!!

'சிக்கனக் குரல்' செப்பிடு வித்தை

"சிக்கனம்! சிக்கனம்!! என்று பேசப்படுவது, 99 சத விகிதம், பிரச்சாரத்துக்காகத்தான் என்று டில்லியினர் கருதுகிறார்களாம். இதுபற்றி வாரத்துக்கு இரண்டு தடவைகளாவது ஏதாவது வெளியிட்டுக்கொண்டேயிருக்கும்படி சர்க்காரின் பிரச்சார இலாகாவுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம். ஆனால், சர்க்கார் காரியாலயங்களில் யாரும், இதுபற்றிக் கவலைப்படவில்லையாம்.

மந்திரிகளின் சம்பள விகிதங்களில் குறைப்பு செய்து கொள்வதாகக் கூறப்படுகிறதல்லவா? இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அதிகமாகப் போனால், ஒரு இலட்சம்தான் கிடைக்குமாம்! கார்களில் கொடி பறக்கவிட வேண்டாமென்று கூறியிருக்கிறார்களல்லவா, இதனால் ஒரு 'புதுக் காசும்' மிச்சப்படப் போவதில்லை, என்று டில்லி அதிகாரிகள் கருதுகின்றனராம்.

சிக்கனச் சிந்து பாடப்படுகிற இந்த நேரத்தில், கடந்த வாரம், பலரை டில்லியில் திகைப்புக்குள்ளாக்கிற்றும் ஒரு செய்தி! உள்நாட்டு அமைச்சராகவும், நேருவுக்கு மிகவேண்டியவராகவும் இருக்கிற பண்டித பந்துவினுடைய மகனின் கலியாணத்துக்காக ஒவ்வொரு டில்லி மந்திரியும் அவர்களது உறவினர்களும், நைனிடாலுக்குப் போகிறார்கள் என்பதுதான் அது.

இதுபோலவே, கடந்த வாரம், லட்சுமணபுரியிலிருந்து ஒரு சேதி வந்தது. சர்க்கார் அதிகாரிகளுக்காகவும், மந்திரிகளுக்காகவும் ஐக்கிய மாகாண சர்க்கார் ரூபாய் மூன்று கோடி செலவிடப் போகிறார்களாம்!

காரில் கொடிபறப்பது, கூடாது என்பது சிக்கனம் — ஆனால் கார் வாங்குவது......!!

108 பார்லிமெண்டரி பங்களாக்களைப் புதுப்பிப்பதற்கென்று டில்லியில் 6 லட்ச ரூபாய்கள், அனுமதிக்கப்பட்டுள்ளன. இதுவும், அநாவசியம் தானே! பார்லிமெண்டரி குடியிருப்புக் கமிட்டி, இந்தத் தொகையை, கண்டிராக்டர்களுக்குக் கொடுத்திருக்கிறது.

"ஐக்கிய மாகாணத்திலுள்ள அதிகாரிகள் தம் வசமிருக்கும் 2,000 கார்களையும் குறைத்துக் கொள்ள மறுத்துவிட்டனர்! இப்படியிருக்கும்போது, எப்படிச் சிக்கனம் ஏற்பட முடியும்?",

இவ்வாறு 'மெயில்' ஏட்டின் டில்லி நிருபர், எழுதுகிறார். பம்பாயிலிருந்துவரும், 'கரண்ட்' எனும் ஏடு, சிக்கனம் பற்றி, ஒரு தகவலைத் தருகிறது. அது, இதோ:

"பிரதமர் நேரு, ஐரோப்பியச் சுற்றுப் பிரயாணம் சென்றாரல்லவா? அவரை ஏற்றிச் சென்ற விமானம் முதன் முதலாக ஓர் ஒத்திகை நடத்தியதாம். எந்தெந்த இடங்களுக்கு நேரு போவதாக திட்டமிட்டிருந்தாரோ அந்த இடங்களுக்கெல்லாம் போய் வந்ததாம, விமானம். ஒவ்வொரு நாட்டு விமான நிலையங்களிலும் சென்று இறங்கி ஒத்திகை நடத்தி வந்ததாம். பிறகுதான், அந்த விமானத்தில நேரு, ஏற்றிச் செல்லப்பட்டாராம். இந்த ஒத்திகைக்கான செலவு ஒரு இலட்சம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது."

★

பரபரப்பூட்டவே யன்றி, காரியமாற்ற அல்ல!!

3-ம் பக்கத் தொடர்ச்சி

தான் பெறுவார்கள் — நமக்கோ
எஜமானர்கள் இருவர்—எனவே
வரவு செலவும இரண்டு!!

சென்னை, தனது டில்லி மேலவ
களின் தயவினை எதிர்நோக்கியே
தனது நாட்டின் திட்டங்களை
தீட்டவேண்டியிருப்பது, தீத
னது மட்டுமல்ல, எவ்வள
நியாயமற்றது என்பதை, 'திரா
விட நாடு' கோரும் நாம் அடிக்கடி
வலியுறுத்தி வருகிறோம். அப்
படி ஏற்பட்டுவிடின், வகுக்கப்
படும், புதிய வரவு செலவுத் திட்
டம் நிச்சயம், ஒரு 'கணக்கு நோட்
டாக' காட்சி அளிக்காது. ஏனெ
னில், நமக்கு நாமே, வகுத்துக்
கொள்வதாக அது அமையும்
அந்தச் சுதந்திரம் இல்லாமையால்
தான், தோழர் சுப்பிரமணியம்
ஏதோ உருளும் சக்கரம் உருண்
அளவுக்குப் போதும் என்கி
அளவுக்கு, கணக்கு ஒப்புவி
கிறார்-மாணவனைப போல்!!

இந்த நிலை மாறி, நமது தேவை
களை உயர்த்திக் கொள்ளு
முறையில், 'பட்ஜட்' தயாரிக்கு
நாள் வரவேண்டும். அதற்கு
'மாடல் சோஷியலிசமோ' அல்லது
'ஐக்கிய ஆலாபனமோ' பயனளி
காது! நமக்கு நாமே என்கி
நிலைமை மலரவேண்டும்!!

★

ஏற்றி வைத்தால் விடாது நூ
ஆண்டுக்காலம் எரியக்கூடிய மின்
சார 'பல்ப்' ஒன்று கண்டுபிடிக்கப்
பட்டிருக்கிறது. இங்கல்ல
அமெரிக்காவில்! நூறு ஆண்டுகள்
எரியுமாம். முதல் முதல் 1879
மின்சார விளக்கைக் கண்டுபிடித்
தாமஸ் எடிசன், வகுத்த முறை
களைக் கொண்டே இந்த நூதன
காணப்பட்டிருக்கிறது. எடிசன்
கண்டுபிடித்த 'பல்ப்' தொடர்ந்
79 மணி நேரம் எரிந்தது! இப்போ
ஒரு 'பல்ப்' 100 ஆண்டுகள் எரிய
கூடியதாகக் கண்டுபிடிக்கப்ப
டிருக்கிறது!! இந்த 'பல்பில்' ஒன்
வாங்கினால், இரண்டு தலைமுறை
களுக்கு நாம் பல்ப் வாங்கவேண்
டிய அவசியமே இராதல்லவா
எப்போது இங்கு வருமோ!!

வரவு செலவு

[5] ஆண்டு சந்தா ரூ. 8 [7—7—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 31

'என்ன வருமோ!', என்று ஏங்கியவன், 'அப்பாடா' என்று பெருமூச்சுவிடும் சந்தர்ப்பத்தை இந்த ஆண்டு வழங்கியிருக்கிறார், சென்னை மாநில நிதியமைச்சர். இதற்கு, டில்லி போட்டிருக்கிற, புது வரிகள் ஒரு காரணமாகும்! மென்மேலும் மாநில அரசுகளும் புதிய வரிகளைப்போட்டால், அதிருப்தி அதிகரிக்கும் என்பதாலேயே, ஒவ்வொரு மாகாணத்திலும் சிற்சில கோடிகள் துண்டு விழுந்தாலும், புதிய வரிகள் போடவில்லை. எனவே, இதற்காக நிதி அமைச்சரை நாம் பாராட்டுவதற்கில்லை யென்றாலும், பெருமூச்சுவிடும் அளவோடு 'பட்ஜட்' இருப்பதற்காக, மகிழ்ச்சி அடைகிறோம்!! ஏனெனில் காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு வசூலித்த பணத்தை ஒழுங்காகச் செலவிடுவதற்கில்லை யென்றாலும், புதிய வரிகள் போடமட்டும் அஞ்சுவதில்லை. அதற்குக் காரணம், யார் கேட்பவர்கள் — கேட்டால்தான் என்ன!—நம்மை என்ன செய்யமுடியும் — என்கிற தைரியம்தான். இல்லையென்றால், நிதியமைச்சர் டி. டி. கே. இந்தக் கிழமை, சென்னையில், எனக்கு இவர்கள் யாரும் ஓட்டுப்போடவில்லை. எனவே, இவர்கள் கோரிக்கையை நான் ஏற்கவேண்டிய அவசியமில்லை என்று துடுக்கோடு பதில் சொல்வாரா? ஏனய்யா, இப்படி வரிகளைப் போட்டீர் — தேர்தலின்போது சொல்லவில்லையே—இப்போது உனக்கு இந்தப் புதியவரிகள் நியாயம் எனப்பட்டால் பதவியைத் துறந்துவிட்டு, தேர்தலுக்கு நின்று பார்க்கிறீரா—என்று எதிர்க்கட்சிகள் 'சவால்' விடுகின்றனரே, என்று ஒரு நிருபர் கேட்டதற்குத்தான் இவ்வண்ணம் பதிலளித்திருக்கிறார்!! இவர்கள் எனக்கு ஓட்டுப்போடவில்லை. எனவே, நான் கேட்கவேண்டிய அவசியமில்லை—ஜனநாயகம் என்று இதற்குப் பெயர்? யார் ஓட்டுப் போட்டாலும் போடாவிட்டாலும், அவர்களனைவருக்காகவும்தான், இவர் அமைச்சராயிருக்கிறார்! சம்பளம் வாங்குகிறார்!! இந்த அடிப்படை உண்மையையும் மறந்து, எதிர்க்கட்சிகள் எனக்கு ஓட்டுப்போடவில்லை, ஆகவே இணங்கவேண்டிய அவசியமில்லை, எனகிறார். "சரி அமைச்சரே! உமக்கு ஓட்டுப்போட்ட மக்கள் இருக்கும்போது ஏன் அஞ்சுகிறீர்? நிற்பதுதானே, இன்னொரு தேர்தலுக்கு!!", என்று கேட்க எவருளார், எனும் எண்ணம் போலும். இந்த 'மதயானை'க் குணத்தாலேயே, ஒவ்வோராண்டு வரவு செலவுத் திட்டத்தையும் ஏதோ ஒரு 'பட்டியல்' போலப் படித்துக் காட்டுகிறார்கள்! 'பட்ஜட் கூட்டத்தை,' மிக முக்கியமாக எல்லோரும் கவனிக்கக் காரணம், ஏதாவது புதுப்புது நன்மைகளும் யோசனைகளும் கிடைக்கின்றதா, என்று அறியத்தான். இந்த 'ஆபத்துக்குள்' அடியெடுத்துவைக்கவில்லை, மாநில நிதி அமைச்சர்! மாணவன், ஆசிரியரிடம் கணக்குப் போட்டுக் காட்டுவதுபோலத் தனது கடமையைச் செய்திருக்கிறார்!!

பட்ஜட்டில் 1957—58க்கு 56.48,00,000 ரூபாய் வருமானம் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது! இதுபோல, 1949-50ல் சர்க்காருக்கு ரூ. 56.91,00,000 வந்ததாம்—1945-46ல் ரூ. 47,91,00,000 வருமானம் வந்ததாம். இந்தப் புள்ளி விபரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், முன்னைவிட, எவ்வளவு வரி உயர்ந்திருக்கிறது என்பது விளங்கும். இந்த ஆண்டு போடப்பட்டிருக்கிற பட்ஜட் தமிழகத்துக்கு மட்டிலும்தான் —இதிலேயே 56 கோடிக்கு மேல் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது! பத்து வருடங்களுக்கு முன், பிரியாத ஆந்திரமும், தென் கன்னடமும், மலபாரும் சேர்ந்து வரியாகத் தந்த தொகை 56 கோடி ரூபாய்!! இந்த விபரம் கூறுவதென்ன? பத்து ஆண்டுக் காலத்தில் வரி வளர்ந்திருக்கிறது, என்பதைத்தான்! 1938-39ல் சென்னையின் மொத்த வரி வருமானம் ரூ. 16,12,00,000 இருந்ததாம்!! எவ்வளவு மாற்றம்?

இப்படி வரிபோட்டு வசூலிக்கிற தொகையோடு, மத்திய சர்க்கார் வாங்கிச் செல்லும் வரி இனங்களும் நமக்குக் கிடைத்தால், என்னென்ன செலவுகளைச் செய்துகொள்ளலாம்--எவ்வளவு புதிய புதிய காரியங்களைச்செய்யலாம். அதற்கு எங்கே உள்ளது வழி! ஒரு நாட்டு மக்கள் ஒரே ஒரு வரவு செலவுத் திட்டத்தைத்

(2-ம் பக்கம் பார்க்க)

புதிய பேறு! கெட்ட எழுத்து!!

இருபதாண்டுகளுக்கு மேல் எம்மை அசைக்க யாருளார், என்று கருதிக்கொண்டிருந்த கானடா நாட்டின் பழைய பிரதமர் வரவில்லை; தேர்தலில் தோற்றதால் புதியவர் வந்துள்ளார்! புத்தம் புதிய நாடு, இருண்ட கண்டத்திலிருப்பதால், ஏற்றமும் பெருமையும் அளித்திட, ஆங்கிலேயர் இதுகாறும் தயங்கிய கனு இதுபோது பிரதிநிதித்துவம் பெற்று, பிரதமர் நிக்ருமா, கலந்து கொள்கிறார்! போன காமன்வெல்த் மாநாட்டின்போது, இருந்த ஈடன் துரையில்லை; இங்கிலாந்தின முதல்வராக, மாக்மில்லன் கலந்து கொள்கிறார். இதையெல்லாம, தேம்ஸ்நதிக் கரையிலே விருந்தும் அதைவிட அருமையான பாராட்டுச் சுவையும் பெற்றுக் கொண்டிருக்கும் நேரு அவர்கள் எண்ணாமலா இருக்க முடியும்? டென்மார்க்கிலே விருந்து அருந்தி நார்வேயில் நடனம் ஆடி, ஸ்வீடனில் சிரித்துப் பேசி, சிங்காரத் தீவாம் இலண்டனுக்குச் சென்றிருக்கிறார், நேரு. மகுடதாரியான அரசின விருந்து கிடைக்கிறது' அன்றோர் நாள், இந்தியாவையே ஆண்ட; மவுண்ட் பேட்டன் மாளிகையில்தான் தங்கியிருக்கிறார்! காமன்வெல்த்நாடுகளிலேயே அதிகம் மக்கள் தொகையுள்ளதும், மிகப் பெரியதுமான இந்திய உபகண்டத்தின் பிரதிநிதி இவர். இதனால், ஏற்றமும் சிறப்பும், அதிகமாகவே அளிக்கப்படுகிறது—ஏனைய நாட்டுப் பிரதமர்கள் இவர் வருகையை எதிர்பார்க்கின்றனர் — கருத்துக்களைக் காது கொடுத்துக் கேட்கின்றனர் — இந்த அளவுக்குக் கீர்த்தியும் புகழும் பெறும், நேரு அவர்கள் மனதில், திடீரென ஒரு கேள்வி உதிக்கிறது :- “இப்படி, காமன்வெல்த் மாநாடு என்றுகூடி, உலகப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம், பேசுகிறோமே? இதனால், சாதாரண குடிமகனுக்கு, ஏதாவது பலனுண்டா?”. தன் உள்ளத்தைப் பார்த்துக் கேட்கிறார். அவர் மனக்கண்முன், ஏழ்மையும் இல்லாமையும் பரவிக் கிடக்கும் இந்தியாவும், அங்கு வாழ் மக்கள் தனனால் எல்லாச் சுகமும் வரும் என்று கொண்டிருக்கும் நம்பிக்கையும் வருகின்றன. அவர்கள்தானே, ஆக்கவும் அழிக்கவும் வல்லவர்கள் என்பது கவனத்துக்கு வருகிறது. கனடாவும், கனுவும் கவனமூட்டுகிறது விருந்து, மருந்தாகிறது! பாராட்டுரைகள் காற்றுரைகளாகின்றன!! பின்லாந்தில் பெற்ற பெருமையும், நார்வே தந்த உற்சாகமும், டென்மார்க் அளித்த சிறப்பும், ஸ்வீடன் தந்த ஆனந்தமும், மறைகின்றன — எங்கு பார்த்தாலும், வறண்ட தலைகளும், இடிந்த குடிசைகளும், கோவணாண்டிகளாக மாடு மேய்க்கும் சிறுவர்களும்,தோன்றுகின்றனர். மனச்சாட்சி உறுத்துகிறது, அவரை! “இந்தப் புகழும் பெருமையும் சரி. நாம், காமன்வெல்த் மாநாட்டிலே கலந்துகொண்டு பேசுவதும் சரி. ஆனால், இந்தக் காமன்வெல்த்தால், சாதாரணக் குடிமகனுக்கு ஏதாவது நன்மையுண்டா?” என்று கேட்கிறார், உள்ளத்தை! ஒரு காலத்தில், ஏழை எளியவர்களுக்காக, ஓடியாடிப் பணிபுரிந்த உள்ளமன்றோ, அது? அதனால், உறுத்துகிறது! குடைகிறது!! அவராலும், பொறுக்க இயலவில்லை, அதனால் மனந்திறந்து, அங்கே ஒரு பேட்டிக்குப் பதிலளிக்கையில், “இப்படிப்பட்ட காமன்வெல்த் பேச்சுக்களால், பாமர மனிதருக்கு, எவ்வித நன்மையும் கிடையாது,” என்று வெளியிட்டிருக்கிறார். இதையே, இதுகாறும் நாம் கூறி வருகிறோம்! அவர்கள் போற்றும் ஆச்சாரியார், எடுத்துரைக்கிறார்!! ஆயினும், காமன்வெல்த் உறவு வேண்டும் என்று பிடித்த பிடியாயிருக்கும், பிரதமர், இப்போது இவ்விதம், உரைக்கிறார்.

உரைத்தாரே ஒழிய, தொடர்பைத் துண்டித்துக் கொள்வாரா, என்று கேட்டால் ஒருக்காலும் செய்யார்! நேரு அவர்களுக்கு, ஒவ்வோர் சமயம் மனச்சாட்சி உறுத்துகிறது — தான் மகாத்மாவின் சீடர் என்று உணர்கிறார் — உடனே அக்கிரமங்களைப் போக்கும் ஆவேசம் பெறுகிறார்— ஏடு படிக்கிறார், எழுதுகிறார், ஒவ்வொருவருக்கும் — பேசுகிறார், பிரமாதமாக. ஆனால், அடுத்த கணம் பிரதமர் எனும் பதவி தெரிகிறது, அது தரும் பெருமையும் புரிகிறது உடனே வாய்மூடி மௌனியாகிறார், எண்ணங்களைத் தேக்கிக் கொண்டு, இழுப்பார் கைப் பிள்ளையாகி விடுகிறார், காற்றடிக்கும் திசையில் பறக்கிறார்!!

விமானமேறி, டில்லியை விட்டு, நேரு அவர்கள் புறப்படும்போது, மாநிலத் தலைவர்களுக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும், மடல் ஒன்று தீட்டியதாகப் பத்திரிகைகளில் கண்டோம்—மடலா, அது! இல்லை இல்லை, கண்ணீர்க் கடல் என்று கூறலாம்!! ஆழ் கிணற்றுக்குள் அமிழ்ந்து இப்போதோ இன்னும் கொஞ்ச நேரத்திலோ என்று துடித்துக்கொண்டிருப்பவன் எழுப்பும், கடைசிக் குரல், எனலாம். அந்தளவுக்கு, பரிதாபமும் வேதனையும், கலந்திருக்கிறது, இந்தக் கடிதம்--இப்போது எப்படி காமன்வெல்த் மாநாட்டிலே கலந்து கொண்டபடியே,பாமரனுக்குப் பலனில்லை என்று பார்க்கிறாரோ, அது போலவே காங்கிரசை ஆட்டிப் படைப்பது தன கையில் இருக்கிறது எனத் தெரிந்தும் அந்த மடலைத் தீட்டினர்!!

நேரு, நினைத்தால் எதுவும் செய்யலாம். அரசாங்கத்தில் மட்டுமல்ல. காங்கிரஸ் கட்சியிலும், அவர் வைத்ததுதான் சட்டம்.

எனினும், எழுதினர் காங்கிரஸ்காரர்களுக்கு— உருக்கமெழ, உள்ளம் துடிக்க, எழுதினர் — உள்ளீரல் பற்றி உடலில் கொஞ்சங் கொஞ்சமாக மரணவஸ்தையை அனுபவிக்கும் தோரணையில் எழுதினர்,

அந்தோ காங்கிரஸ்காரர்களே! காங்கிரசை ஒரு மடம் ஆக்கிவிட்டீர்கள். அதோடு விட்டீர்களா? இல்லை! அந்த மடத்தின் ‘மகந்து’ வாக என்னையும் ஆக்கிவிட்டீர்கள்.

காங்கிரஸ், இவர் கைப்பிடியிலிருக்கிறது! எனினும் இவ்வாறு எழுதுகிறார் — ஏன்? — அந்த நேரத்தில், அவருள்ளம் குத்துகிறது, குடைகிறது. உடனே, ஏனையோரைப் பார்த்து, இப்படிக் கண்டனமும், கோபமும் கொள்கிறார்—கடிதம் தீட்டுகிறார்.

(13-ம் பக்கம் பார்க்க)

இட்டிலியும் சப்பாத்தியும்!!

தமிழர்தம் அருமை பெருமைகளை அறிகிருர்களோ இல்லையோ, இட்டிலியின் சிறப்பு மட்டும், எங்கும் பரவியிருக்கிறது! இல்லையெனில், இரண்டாண்டுகளுக்கு முன்பு, ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில், பெரிய பெரிய இட்டிலிப் பானைகள் தேவைப்பட்டிருக்குமா? முன்பு கவர்னராயிருந்தாரே பிரகாசா, அவருக்கு, இட்லியென்ருல் அபார மோகமாம்! விருந்து என்று யாராவது கூப்பிட்டால் விடவேமாட்டாராம் — இட்டிலியிருந்தால், ஆனந்தம் கொள்வாராம்!! இவ்வளவு பிரக்யாதி பெற்றுவிட்ட இட்டிலியோடு, ஆந்திரச் சட்ணியும் சேர்ந்துவிட்டால் எப்படியிருக்குமாம் தெரியுமா? பல்வந்த்ராய்மேதா ஆந்திராவிலுள்ள குத்தி ரயில் நிலைய உணவு விடுதியில், சாப்பிட்டுவிட்டு, கூறுகிருர் —இட்லியோடு ஆந்திராச் சட்ணி, ஆகா, என்ன அருமை, என்ன அருமை என்று!! உணவு ருசி பார்க்க அல்ல அவர் ஆந்திராவுக்கு வந்தது—திட்டக் கமிஷன் சார்பில் சமுதாய நல வேலைகளைப் பற்றி ஆராயும் குழுவின் தலைவராக வந்தார். அதனுல், என்ன! வாய் ருசிக்கு அடுத்தபடிதானே, எல்லாம் — ஒரு சாண் வயிறே இல்லாட்டா, உலகத்தில் ஏது கலாட்டா!!

இட்லியின் மீது இவ்வளவு மோகம் இருப்பதால்தான் தனிநாடு வழங்க, வடநாட்டதிபர்கள் தயக்கம் காட்டுகிருர்களோ, என்றுகூட ஐயம் எழக்கூடும். உண்மையில், இந்த இட்டிலிகளுக்கு, பேச வாயும் நடந்து செல்லக் காலும் இருந்தால், தமிழ் நாட்டுக் காங்கிரசாரைவிடத் தைரியமாகக் கிளம்பும், டில்லிக்கு! பலியாக அல்ல; சண்டை போட!! இப்படிப் புகழ் பாடுகிருர்களே ஒழிய, 'இட்டிலி' மீதும் வடவர் ஆதிக்கம் செலுத்த ஏற்பாடு செய்கிருர்களாம்

தமிழைப்பற்றிப் புகழ்வது. தமிழ் நாட்டைப்பற்றிப் பேசுவது, ஆனுல் சட்டத்தின் மூலம் எந்த அளவுக்கு தமிழையும் தென்னவரையும் நசுக்கமுடியுமோ, அந்தளவுக்கு ஈடுபடுவது — என்று தொடர்ந்து டில்லியினர் செய்து வருகிருர்களல்லவா? அக்கொடுமை, இட்டிலிக்கும், ஏற்படும் என்று தெரிகிறது? இட்டிலியின் மீது ஆதிக்கம் செலுத்த, கோதுமை அனுப்பப்போகிருர்களாம்—கூறுகிருர் டில்லி உணவு மந்திரி அஜித் பிரசாத் ஜெயின்!!

இட்டிலி எவ்வளவு சுலபமான பொருள், சட்ணி—சாம்பார்—எதுவும் இல்லாமல் கூடச் சாப்பிடலாம் எவ்வளவு எளிதில் தயாரிக்கலாம் என்பதை நாம் அறிவோம். ஆனுல், கோதுமை அப்படியல்ல! ஒரு பிடி அரிசியை எடுத்து வேக வைத்தால், சோறு — ஒரு மிளகாய்த் துண்டு காரமாகயிருந்தால் போதும்—பசி தீர்ந்துவிடும். ஆனுல், கோதுமை அப்படியா? பூரி செய்ய, எண்ணெய் வேண்டும் —பிறகு பூரிக்கு, உருளைக்கிழங்கு வேண்டும்; அதற்கு பலசரக்குகள் வேண்டும். அதுபோலத்தான், சப்பாத்திக்கும்!! அதனுலேயே, அரிசியைவிட ஏழைகளுக்கு ஏற்ற உணவுப் பொருள் கிடையாது என்பார்கள். சமைக்கவும் சரி, சாப்பிடவும் சரி மிக மிக எளிதானது, அரிசிதான்! ஆனுல், இந்த அரிசிக்கு ஆபத்து வருகிறது — 'கோதுமை ஏகாதிபத்தியம்' கோலோச்ச வருகிறது!!

ஒன்றரைலட்சம் டன் அரிசிகிடைத்தால் போதும். 1958 ஜனவரி மாதம் வரையில் நமக்குக் கவலையில்லை—என்று கூறுகிருர், காமராஜர்! இதை, டில்லி சர்க்கார் உதவினுல் போதும், என வேண்டுகோள் விடுத்திருக்கிருர்!! இப்படிக் கேட்பதுகூட, ஏன் தெரியுமா? இங்கிருந்து கேரளாவுக்கு அனுப்பப்பட்ட அரிசியை ஈடுகட்டிக்கொள்ளத்தான், என்று!

அடக்க ஒடுக்கமான மாணவன், ஆசிரியரிடம் கைகட்டிக் கெஞ்சுவதுபோலத் தெரிவிக்கிருர்! ஆனுல், அஜீத் பிரசாத், கோதுமையை அனுப்புகிறேன் என்று கூறுகிருர்!!

தென்னுட்டில், அரிசியை மட்டும் உணவாகக் கொள்ளும் பழக்கம் இருக்கிறது. இது, கூடாது. அரிசிக்குப் பதில்; கோதுமையையும் சாப்பிடும் பழக்கம், உண்டாகவேண்டும். இதுவிஷயத்தில், வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள மத்திய அரசாங்கம் விரும்புகிறது என்று, பெங்களூரில், அண்மையில் பேசியபோது தெரிவிக்கிருர், டில்லி உணவு மந்திரியான அவர்! அரிசி மட்டும் கேட்காதே — கோதுமை வேண்டுமானுல், கேள் என்று சென்னை சர்க்காருக்கு டில்லியிலிருந்து குறிப்பும் வந்திருக்கிறதாம்!!

கோதுமை, வடநாட்டிலிருந்து வரவேண்டும். ஆனுல், அருகில் உள்ள ஆந்திரத்தில், அரிசி அமோகமாக மிதப்பட்டு இருக்கிறது. ஆந்திராவும், சென்னைக்கு அரிசி அனுப்ப இயலும்—தயாராயிருக்கிருர் — ஆனுல் இரயில் வாகின் சரிவரக் கிடைக்கவில்லை என்கிறது! இதற்கான வசதியைச் செய்து, அரிசி இங்கே வரச்செய்யலாம் — ஆனுல், டில்லி, பூரி சப்பாத்திகளைத் தென்னுட்டினர் பழகிக்கொள்ள வேண்டும் என்று அறிக்கை விடுக்கிறது, அரிசிக்குப் பதில் கோதுமையைச் சாப்பிடப் பழகுங்கள், என்கிறது!!

முதலமைச்சர் என்கிற முறையில் முதன்முதலாக டில்லிக்குச் செல்லும் வழியில், சென்னையில் இறங்கிய கேரளத்து நம்பூதிரிபட் அவர்கள், நிருபர்களைச் சந்தித்தபோது சொன்னுர், "கேரளத்து உணவுப்பிரச்னை சம்பந்தமாக, மத்ய சர்க்காரிடம் பேசப்போகிறேன். அவர்களைக் கேட்டால் அரிசிக்குப் பதில் கோதுமை தருகிறேன் என்கிருர்கள்," என்று. அரிசிக்குப் பதில் கோதுமையை ஏற்பதில், கேரளத்துக்கும் சங்கடம் இருக்கிறது—குமுறல் கலக்கத் தெரிவித்தார், அவர். இங்கே, இதுபோல எக்குமுறலும், தென்படவில்லை — காமராஜர், வழக்கம் போல இருக்கிருர்!!

கோதுமையை கொட்டி வைத்துக்கொண்டு. இந்தா! இந்தா!! என்று [illegible] டில்லி.

வெளி நாடுகளிலிருந்து, ஏராளமான இறக்குமதியைச் செய்து, அந்தக் கோதுமையைத்தான் இங்கே அனுப்புகிறேன, என்கிறது. உலகில் எங்கும் கோதுமைதானே கிடைக்கிறது—அபபடியிருக்கும்போது அரிசிக்கு எங்கே போவது—கோதுமையைச் சாபபிடப் பழகிக்கொண்டால் என்ன, என்று கேட்கத் தோன்றலாம். உண்மை அதுவல்ல! தென்னுட்டைப்போல், அரிசி உற்பத்தி செய்துவாழும் நாடுகள்பலவுண்டு. ஏகிப்து, பர்மா, தாய்லாந்து, பாகிஸ்தான் பிரேசில், ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ், ஜப்பான் போன்ற நாடுகளில் அரிசி, உற்பத்தித்தான். அதிகம். சில நாடுகளைத் தள்ளினுலும், எகிப்து, தாய்லாந்து, ஜப்பான், இத்தாலி, பிரேசில் போன்ற நாடுகளிலிருந்து ஏராளமான அரிசியைத் தருவித்துத் தரலாம்! ஆனுல், மனம் வேண்டுமே!!

மொழித்துறையில். இந்திஆதிக்கம், அரசியல் துறையில் வடநாட்டுப் பிடிப்பு, எனறு எப்படி இருக்கிறதோ, அதுபோல உணவுத் துறையிலும் கோதுமை ஆதிக்கம் உண்டுபண்ண முயலுகிறது, டில்லி. சாப்பாட்டுப பிரச்னையான இது, சாதாரணமாகத் தோன்றக் கூடும். அலட்சியமாகக்கூட எண்ணலாம். ஆனுல், அதனடியில் புதைந்து கிடக்கிறதே, அந்த எண்ணம நஞ்சினும் கொடியதாகும்! இல்லையெனில், இட்டிலியைப்பற்றிப் பாராட்டிக்கொண்டே கோதுமையைப் புகுத்த நினைப்பார்களா!!

இட்டிலி மட்டுமல்ல, தென்னகத்தின் ஒவ்வொரு துறையிலும், கலை அழகும், சிக்கன உயர்வும், நிரம்ப இடம் பெற்றுள்ளன. இந்த அடிப்படையை உணர்ந்தால், 'பூரி ஆதிக்கத்'திறகு எவரும் அடிபணியார். ஒரு பொருளை நாமே விரும்பி ஏற்பது, வேறு! விரும்பி ஏற்கும்படி திணிப்பதென்பது வேறு! டில்லிக்கு உள்ள அவசரத்தில், எல்லாவற்றையும், தென்னுட்டின் மீது, திணித்துக்கொண்டே உள்ளது. தட்டிக்கேட்க நாதியில்லை! தனியரசானுல் தவிர, தங்குதடையின்றி, வாழவும் வழி கிடைக்கப் போவதில்லை!! ★

★ அழகினைப் பாரீர்! ★

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி, வானளாவப் பேசுகின்றனர், காங்கிரஸ் தலைவர்கள். அதன் சாதனைகளைப்பற்றி மாறுபட்ட கருத்தலைகள் உலவுகின்றன! ஆட்சிபீடத்திலிருப்பவர்கள், மகத்தான சாதனையென்கிருர்கள் — நிபுணர்களோ, எதிர்பார்த்தது கிடைக்கவில்லை என்கின்றனர் — ஏழையும சாதாரண குடிமகனும், "எத்தனையோ கோடி ரூபாய்களைக் கொட்டிச் செலவழித்ததாகச் சொல்கிருர்களே? எனக்கு ஒரு பயனும் நன்மையும் ஏறபட்டதாகத் தெரியவில்லையே" என்று ஏமாற்றத்துடன் நோக்குகிருன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் தோல்வி, உணவுப் பிரச்னை பற்றியதாகும். தேர்தலுக்கு முனபு, உணவுப் பற்ருக்குறை தீர்ந்து விட்டது, என்று தெம்மாங்கு பாடினுர்கள்! இதோ—உணவுப பிரச்னை— இப்போது, ஆங்காங்கும், பெரிதாகி வருகிறது. அச்சத்தையும் திகிலையும உண்டாக்குகிற அளவுக்கு, வளர்ந்து வருகிறது.

தமது சாதனைகளைப் பற்றிய விளக்கங்களை வெளியிடவே, திட்டக் குழுவினர், அஞ்சுகின்றனர்— அதிலிருக்கும் கணக்கு விபரங்கள் மக்கள் மன்றத்தில் அதிருப்தியையும் எரிச்சலையும் ஏறபடுத்தும் எனப் பயப்படுகின்றனர்—என்று செனற வாரம் தகவல் பெற்ருேம். எனினும், எல்லா விபரங்களையும் தராவிடினும்,ஏடுகள்மூலம் விபரங்களைத் தந்துள்ளார்கள்! அதைப் பற்றி பத்திரிகைகள் பலவிதக் கண்டனக் குறிப்புகளைத் தந்துள்ளன!!

இதோ, ஒரு விபரம் — ரூபாய் 2,354-கோடி 68½லட்சங்களைச் செலவிடவேண்டும் என்பதுதான் முதல் திட்டத்தின், மூல முழக்கமாகும். அதற்கான தொகைகளையும், வரிகளை உயர்த்தியும், கடன்களை வாங்கியும் அமெரிக்காவைக் கெஞ்சியும், கெடுபிடி செய்து சேர்த்தனர். இப்படி சேர்த்த தொகையை, ஒழுங்காகச் செலவிட்டார்களா, என்ருல் கிடையாது! 1,988-கோடி 26-லட்சங்களைத்தான் செலவிட முடிந்ததாம்!!

ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒதுக்கப்பட்ட தொகையையும் எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்பதையும், இதோ காண்பித்துள்ளோம்.

துறை	ஒதுக்கியது	செலவிட முடிந்தது
விவசாயம்	199.419	191.15
சமூகநல திட்டம்	100.87	64
பாசன வளம்	647.46	584.96
கனி தொழில்	168.24	74.47
சிறுதொழில்கள்	29.53	19.39
சமுதாய சேவை	531.56	422.86
சுகாதாரம்	137.76	100.95
கல்வி	170.4	152.96
அகதிகள்	135.7	97.29
போக்குவரத்து	567.62	231.48
ரயில்வே	267.7	267.7

இப்படி, போட்ட திட்டப்படி, பணத்தைச் செலவழிக்கும் வழிவகைகளே புரியவில்லையாம! எப்படியெப்படி, செலவிடலாம், என்பது புரியாத காரணத்தாலேயே இவ்வளவு தூரம் ஒவ்வொரு துறையிலும் பணம் மீதப்பட்டிருக்கிறது! திட்டத்தால், பிறகு எப்படிப் பலன் பிறக்கும்? உருவான நனமைகள் கிடைகக்கும்?

அழிந்துள்ள பணத்தில், எவ்வெவ்வளவு 'ஆற்றில் கொட்டியதாயிற்று' என்கிற விபரம், தெளிவாகக் கிடைக்கவில்லை. எனினும், காங்கிரஸ் ஆளவந்தாரின் ஆட்சித் திறமைக் குறைவைப் பறைசாற்றும், இந்தப் பட்டியலைக் காணுங்கள். கொடுத்த பணத்தைச் செலவழிக்கும் திறமையுமில்லை! இந்த லட்சணத்தில் ரூ. 6000-கோடிக்கு இரண்டாம் திட்டம் போட்டிருக்கிருர்களாம், இரண்டாவது திட்டம்!!

★

ஊர்வலம்

—[ஞானக்கண்]—

"செங்கற்பட்டில் 'ரிப்பேரை' முடித்துவிட்டு, வடார்க்காட்டை 'ரிப்பேர்'செய்யப்போயிருந்தீர்களாமே!"

"என்ன, ரிப்பேர் செய்யவா? என்ன உளறுகிறாய்!"

"இல்லை, பத்திரிகையில் அடிக்கடி பார்க்கிறேன்—காஞ்சிபுரம் காங்கிரஸ் கமிட்டி கலைக்கப்பட்டது — அமைப்புக் கமிட்டி - நிறுவப்பட்டது. அமைச்சர் பக்தவத்சலம் அறிவுரை வழங்கினார், என்று. இப்போது, இவ் வேலையைச் செய்ய வடார்க்காட்டுக்கும் போயிருந்தீர்களாமே!!"

பக்தவத்சலம், என்னை ஏறிட்டுப் பார்த்தார்! ஒரு புறம் வெட்கமும், இன்னொரு பக்கம் துக்கமும் அடைக்க, கண்களைத் துடைத்துக் கொண்டார்!!

"என்னங்க இது?"

"ஒன்றுமில்லை, கண்ணில் தூசி விழுந்துவிட்டது..."

"அதாவது, களங்கமற்றிருந்த காங்கிரசில், மாசு உண்டாகிவிட்டது என்கிறீர்களா?"

"நான் அப்படிச் சொல்லவில்லையே உன்னிடம்?"

"சென்ற 13ந் தேதி வேலூர் முசாபரி பங்களாவில் நடைபெற்ற காங்கிரஸ் பிரமுகர்களின் கூட்டத்தில் குறைபட்டுக்கொண்டீர்களாமே— தி. மு. க. வினர், குறைந்த எண்ணிக்கையில் சட்டசபையிலிருந்த போதிலும், அவர்கள் பிரசார முறை தமிழ் நாட்டில் பரவலாகவும் தீவிரமாகவும் நடைபெற்று வருகிறது—என்று!!"

"ஆமாம்! சொன்னேன்-சொல்லாமல் என் செய்வது? தேர்தலில் நடந்த திருக்கூத்து தெரியுமல்லவா, உனக்கு!"

"எல்லாத் திருக்கூத்தும் தெரியும். ஆமாம், தேர்தலில் காங்கிரசுக்கு ஓட்டு—காமராஜர் கட்சிக்கு ஓட்டு என்று பேசிய பிரசங்கிகளுக்கெல்லாம், பணம் கொடுத்தீர்களாமே!!"

"யார் சொன்னது?"

"தினமணியில் படித்தேன்! மேற்படிக் கூட்டத்தில் பேசும்போது— பிரசாரகர்களை வைத்து காங்கிரஸ் பிரச்சாரம் செய்யலாம் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. காங்கிரஸ் தேர்தலின்போது,பிரசாரகர்களுக்குச் சம்பளம் கொடுக்க மாகாண காங்கிரஸ் கமிட்டி பொக்கிஷதார் என்கிற முறையில் 'செக்'கில் கையெழுத்துப் போடும் போது என் கை மிகவும் கூசிற்று. என் மனச்சாட்சிக்கு விரோதமாகவே, நான் கையெழுத்துப் போட்டேன் — என்று பேசினீர்களாமே!!"

"ஆமாம், பேசினேன்!", என்று சொல்லிவிட்டு, இன்னொரு தடவைக் கண்களை அவர் துடைத்துக்கொண்டதைப் பார்க்க எனக்குப் பரிதாபமாகயிருந்தது. ஆகவே, அமைச்சர் கவனத்தைத் திருப்ப எண்ணி,

"ரிப்பேர், சரியாக முடிந்ததா?" என்று கேட்டேன்! நீ, என்ன கிண்டல் செய்கிறாயா? போ, போ, போய் சம்பந்தப்பட்டவர்களைக் கேள் என்று கூறிவிட்டுச் சட்டசபைக்குள் போனார்!!

*

எனக்கும்,சட்டசபைக்குள் போய், நடவடிக்கைகளைக் காணவேண்டுமென்று ஆசை. அதனால், அனுமதிச் சீட்டு வாங்குவதற்காக, அப்படியும் இப்படியும் உலவிக்கொண்டிருந்தேன். முதலமைச்சர் காமராஜ் கார் நிற்பதும், அங்கே ஒருவர் அவருடன் பேசிக்கொண்டிருப்பதும், தெரிந்தது. நைசாக, அங்கு போனேன்.

"அப்படியா, சொன்னார்?" என்றார், காமராஜ்.

"ஆமாங்க!" என்றார், இன்னொருத்தர்!

'எங்கே, இன்னொருதரம்சொல்லு!'

"சொல்றேங்க — உங்களிடம் சொல்லணும்கிறதுக்காக ஒரு வார்த்தைகூட விடாமே, கவனமாக கேட்டேங்க, என்று கூறிவிட்டு — 'சீப்' 'சீப்' சொன்னார் என்ற காரணம் சொல்லாமலும், விசாரணை இல்லாமலும் மூடுமந்திரமாகக் காரியங்கள் செய்வது சரியல்ல என்றும் தக்க விசாரணை செய்தே எவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்று அண்ணாமலைப்பிள்ளை எம். எல். சி. பேசினாருங்க..."

"அப்படியா! நான் பார்க்கிறேன், நீங்க போங்க......" என்று சொல்லிவிட்டு, காமராஜர், காரைத் திறந்து கொண்டு வெளியே வந்தார், முகத்தில் கவலைக் குறி தென்பட்டது! நான் சட்டசபைக்குள் நுழைந்தேன்!!

*

அன்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் 'பட்ஜட்'டைச் சமர்ப்பித்து பேசப்போகிறார் என்பதால், சட்டசபைக்கு ஏராளமான பார்வையாளர்கள் வந்திருந்தனர்! நான் சபாநாயகர் காலரி' என்றழைக்கப்படும் தனியிடத்தில் அமர்ந்தேன்— எனக்கு அருகில், முரட்டுக் கதருடையணிந்த ஒரு அய்யங்கார் இருந்தார். நிதியமைச்சர் சுப்ரமணியம் 'பட்ஜட்டை' படிப்பதற்கு முன்பு எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரு பிரதி அளிக்கப்பட்டது! பிறகு, சுப்ரமணியம், படிக்கலானார் — நமது கழக எம். எல். ஏக்கள் நகல் காப்பியைப் படிக்கும் ஆர்வத்தில் ஆழ்ந்து கிடந்தார்கள்—அந்தக் காட்சியைக் கண்டு, மெய்மறந்து இருந்த நேரத்தில், பக்கத்திலிருந்தவர் என்னைத் தட்டி "பார்த்தீங்களா!" என்றார். அவர் குறிப்பிட்ட இடத்தைப் பார்த்தேன்! ஒரு எம்.எல்.ஏ. சாப்பாட்டுக்கு 'ரெடி'யாக இருப்பவர்போல், 'சப்ளாம் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார் — இன்னொருவர் கண்ணை மூடிக்கொண்டு 'தபசி'லிருந்தார்—ஒருவர், நன்றாக சாய்ந்து கொண்டு இருந்தார்—இதைப் பார்த்ததும், எனக்கு என்னமோபோலிருந்தது!! பக்கத்திலிருந்தவர் என்ன நினைத்தாரோ என்னவோ, "நீங்க எந்த கட்சி?" என்றார். எல்லாம் நம்ம கட்சிதான் என்று பொதுவாகச் சொல்லிவைத்தேன்—தி. மு. க. என்றால் பேசாமலிருந்துவிடப் போகிறார் என்று கருதி! அவர், சலிப்போடு, சொன்னார்.

"பார்த்தீங்களா, சார்! அந்தத் தி. மு. க காரங்க எவ்வளவு சிரத்தையோடு இருக்கிறாங்க. நம்ம ஆட்களைப் பார்த்தீங்களா 'ஏண்டா இங்கே வந்தோம்' என்பதுபோல், குஷாலாக, கண்ணை மூடிக்கொண்டும், காலை நீட்டிக் கொண்டும் இருப்பதை......" என்றார்.

ஆமாம்! பார்க்கிறேன் பரிதாபமாகத்தான் உள்ளது.

ஏன் சார் இருக்கமாட்டாங்க! சிரத்தையுள்ளவங்கன்னு எடுத்தா விரல்விட்டு எண்ணிடலாம்-ஏதோ ஒப்புக்கு இவங்களையெல்லாம் காங்கிரசிலே நிறுத்தி வைச்சு, பணத்தையும் செலவுசெஞ்சு எம்.எல்.ஏ. ஆயிட்டாங்க...ஊம்! என்று பெருமூச்சு விட்டார், எனக்கும் உண்மையிலேயே, பெருமூச்சுத்தான் வந்தது!

*

சொல்வல்லன்-டெமாஸ்தனீஸ்!

வள்ளுவப் பெருந்தகை சொல் வன்மையைப் பற்றி நிறைய சொல்லியிருக்கிறார். சொல் வன்மை பெறுவது என்பது எளிதல்ல.

அத்தகைய சிறந்த பேச்சாளன் மனித குலத்தின் முதல் சொற்பொழிவாளன் தான் 'டெமாஸ்தனீஸ்' டெமாஸ்தனீஸ் ஓர் சிறந்த பேச்சாளன்.

அழகாகப் பேசுபவர்களைக் காய்கிறார்களே அவர்கள் டெமாஸ்தனீசின் வாழ்க்கையைச் சிறிது கூர்ந்து நோக்கினால் நிச்சயம் வெட்கித்தான் தலைகுனிவர்.

கிரேக்கம் அகிலத்திற்கு அளித்த அருமையான பேச்சாளன் டெமாஸ்தனீஸ்; அவனுடைய பேச்சின் நடையழகும், ஒயிலும்ஏத்தனையோ தலைக்கீழ்மாற்றங்களை உண்டாக்கியிருக்கின்றது.

இருள் கக்கும் இரவு நேரங்களில் இசையெழுப்பும் அலை ஓசை நிரம்பிய கடற்கரைக்குச் செல்லும் பழக்கமுடையோர் அந்நேரத்திலே அக்கடற்கரையோரத்திலே அலையோடு போட்டி போட்டுக்கொண்டு தன் நிலை மறந்து உரக்கக் கத்திக்கொண்டிருக்கும் இளைஞனை நிச்சயம் காண்பர். இந்தக் காட்சி ஏறக்குறைய இருபதாயிரம் ஆண்டுகட்கு முன்னர், ஏதன்ஸ் நகரத்திலே காணப்பட்டதாகும்.

அவர்களெல்லோரும் யாரோ பித்தனொருவன் கத்திக்கொண்டிருக்கிறான் இரத்தம் சுண்ட, என்று எண்ணியிருப்பர். ஆனால், அவர்கள் நினைத்திருக்கமாட்டார்கள் உலகத்து சிறந்த பேச்சாளர்களில் ஒருவன் பயிற்சி எடுத்துக்கொள்கிறான் என்று.

பிறக்கும் பொழுதே பேச்சு வன்மையுடன் பிறந்தவனல்ல டெமாஸ்தனீஸ். நன்றாகப் பேச வராதாம் அவனுக்கு. திக்கு வாய் கொண்ட டெமாஸ்தனீஸ் நன்றாகப் பேச முயற்சிக்கையில் வாய் கோணலாகி, முகம் கோரமாக மாறுமாம். தன்னுடைய கோளாறைத் திருத்திக்கொள்ள டெமாஸ்தனீஸ் பலவித வழிகளைக் கையாளுவானாம்.

திக்கு வாயைத் தடுப்பதற்காக வாயில் கூழாங் கற்களை அடைத்துக்கொண்டு பேசிப் பழகுவானாம். அவனுடைய வாய்கோணலையும், முகக் கோரத்தையும் முகம்பார்க்கும் கண்ணாடியின் முன் பேசி தன் கோணலையும்,கோரத்தையும் மாற்றிக்கொள்வானாம். உச்சரிப்பை பாவத்தோடும், உரக்கவும் உச்சரிக்க மேடு பள்ளங்கள் நிரம்பிய இடத்தில் ஓடித் திரிந்து கன் குரலுக்கு வலிவும், வனப்பும் பெற்றானாம். ஓலமிடும் அலைகளின் அருகிலே நின்று நித்தம் நினைவிலிருக்கும் கருத்துக்களை கொட்டிப் பேசுவானாம்.

இரா. மதனகோபால் பி.காம்.,

ஏதன்சின் சிறு நகரப் பகுதியான 'பியானியா' என்னுமிடத்திலே 383 கி. மு. வில் பிறந்தான். அவனுடைய தந்தை படைக்கலன்கள் உற்பத்தி செய்யும் உலைக்களத்தின் உரிமையாளர். பணம் படைத்த அவர் தன்னுடைய மகனுக்கு ஏழு வயது ஆகும்பொழுதே இறந்துவிட்டார். அவர் இறந்தவுடன் தன் மனைவிக்கும், மகனுக்குமாக விட்டுவைத்த சொத்தை — சொத்துக்கு பாதுகாப்பாக நியமிக்கப்பட்ட மூவர் சுருட்டிக்கொண்டனர்.

டெமாஸ்தனீசிற்கு உரிய வயது வந்ததும் சொத்துக்காக வழக்கு தொடர்ந்தார். அந்த மூவரும் நல்ல நிலையிலே இருந்ததால் அவர்கள் பணம் நிறைய செலவழித்தனர். இருந்தும் டெமாஸ்தனீஸ் முடிவில் வெற்றிபெற்றார். ஆனால் என்ன பயன்? சொத்து ஏதுவும் மிச்சமிருக்கவில்லை வழக்காடிய பிறகு.

பிறகு கையில் இருந்த கொஞ்சநஞ்ச பணத்தையும் போட்டு ஏதென்சின் படைக்கு ஓர் கப்பல் கட்ட கொடுத்துவிட்டு வக்கீலாகவும், பேச்சுக்கள் எழுதிக்கொடுப்பவகையுமாக பணியாற்றினார். வழக்கறிஞராகப் பணியாற்றுகையில் மிக உயர்ந்த வழக்குகளையே எடுத்துக்கொள்வார். அவர் பேச்சுக்கள் எழுதி கொடுப்பது சண்டையிடுபவர்கள் அடங்கிய எதிர்க்கட்சிக்காரர்களுக்குத்தானாம்.

அலெக்சாந்தரின் தந்தை, மாசிடோனிய நாட்டுத் தலைவன் பிலிப்பை எதிர்த்து — அவன் ஆக்ரமிப்பை எதிர்த்து மக்கள் அதிருப்தி கொண்டிருந்தனர். பிலிப்பின் எதிராக சண்டையிடுமாறு தூண்டியவர்தான் டெமாஸ்தனீஸ்.

அவருக்கு பிலிப்பினிடமோ, மாசிடோனியரிடமோ தனிப்பட்ட விரோதமோ, வெறுப்போ இல்லை. ஏதன்சு நாடுகளால் ஆளப்படாத கிரீஸ் அழிந்தமாதிரிதான் என்ற எண்ணம் கொண்டவர் அவர். அதனால்தான் அவர் தன்னுள்ளே இருந்து கிளம்பும் விடுதலைத் தாகத்தின் ஒவ்வொரு அணுவும் சிலிர்த்தெழ போராடினார்.

கி. மு. 352ல் தென் கிரேக்கத்தின் மீது படையெடுத்தான் பிலிப்!

அதைக் கண்ட டெமாஸ்தனீஸ் பொங்கிவரும் புதுவெள்ளமென பேச்சுக்களைத் தொடுத்தார்.

குமுறும் எரிமலை, கொந்தளிக்கும் கடல், சுழன்றடிக்கும் சூருவளியென சொற்களைக் கொட்டினார். விடுதலைத் தாகம் மிளிர, வீர உணர்ச்சி பொங்க, இரத்த அணுக்கள் சிலிர்த்தெழ, நரம்புகள் புடைக்க அடிமை நாட்டின் அவதியை சர்வாதிகாரத்தின் செருக்கை எடுத்தியம்பினார் ஏற்ற மிகு கருத்துக்களை எழில்மிக்க நடையில்.

அதுவரை அடிமை யுணர்வு மண்டிக்கிடந்த ஏதன்சு மக்கள் பொங்கி எழுந்தனர். தம் உயிர்களை தாய்நாட்டுக்கு தியாகம் செய்திட தங்கள் இரத்தத்தை தாயகத்தின் அடிமைச் சின்னம் அழிக்க தத்தம் செய்ய எத்துணையோ இளம் வாலிபர்கள், சிங்க ஏறுகளென சிந்தை சிலிர்த்திடும் வகையில் சீறிப் பாய்ந்தனர்.

“எண்ணிவிடும் ஒருசில மணித்துளிகளிலே ஏதன்சு நகரத்து மக்களை ஏற்றம்பெறச் செய்து சீற்றம் கொண்டு சின்ன புத்திபடைத்த சர்வாதிகாரிகளின்மீது பாயச் செய்த படை வீரன், மந்திரவாதி, சக்தி மிக்கவன் யார்?” என்று மக்கள் மட்டுமின்றி பிலிப்கூட வியந்தான். எண்ணி—எண்ணி.

அவன் வேறு யாருமல்ல பேச்சுக் கலைஞன், சொற்கோமான், நாவலன், சொல்லேருழவன டெமாஸ்தனீஸ் என்று அறிந்ததும் “பேச்சால் என்ன செய்துவிட முடியும்” “இதுகளுக்கு பேசத்தானே தெரியும்” என்றெல்லாம் கூறித் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளும் எத்தர்கள், தெளிவற்ற நெஞ்சங்கள் தெளிவடைந்தன, உண்மையை உணர்ந்தன.

இன்றும்கூட அன்று டெமாஸ்தனீசின் ‘முதல் பிலிப்பிக்’ எனப்படும் அந்தப் பேச்சுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கும் முகத்தான் ஆங்கில அகராதியிலே ஆவேசப் பேச்சுக்கு ‘பிலிப்பிக்’ என்னும் அடைமொழியை அளித்திருக்கின்றனர்.

அதே ஆண்டு அவர் “ரோடியர்களுக்காக,” எனப்படும் மற்றொரு மகத்தான சொற்பொழிவாற்றினார். ரோடிசில் கிளம்பிய புரட்சித் தீக்கு ஏதன்சியர்கள் ஆதரவு கொடுக்கவேண்டும் அப்பொழுதுதான் அவர்களுக்கு ஈகியானின் விவகாரங்களில் இழந்த மதிப்பைப் பெற முடியும் என்பதற்காகப் பேசினார்.

அதற்குள் பிலிப் ஒலின்தியஸ் மீது படையெடுத்தான். உடனே ஏதனியர்கள் ஒலின்தியசை படையெடுப்பினின்று காப்பாற்ற விழைந்தனர். அவர்கள் கவனத்தை வேறு புறம் திருப்ப பிலிப் யுபோயியாவில் கிளர்ச்சியைத் தூண்டினான். யுபோயியா ஏதன்சின் வாயிலின் நாற்பது மைல் தொலைவில் உள்ளது. உடனே அரசாங்கத்தினர் யுபோயியாமீது கவனத்தைத் திருப்பினர்.

‘ஒலின்தியாக்ஸ்’ எனப்படும் மூப்பெரும் சொற்பொழிவுகளில் ஏதனியர்களை ஒலின்தியாவைக் காப்பாற்றச் சொல்லி விழைந்தார், டெமாஸ்தனீஸ். ஆனால் பயனற்றுப்போய் விட்டது. யுபோயியா காப்பாற்றப்பட்டது, ஒலின்தியா பிலிப்பால் கைப்பற்றப்பட்டது. இருந்தாலும் பிலிப்பால் ஒலின்தியாவை சுலபத்தில் கைப்பற்ற முடியவில்லை. மக்கள் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டதினால் சமாதான உடன்படிக்கை பற்றி பேசப்பட்டது. அதற்கு டெமாஸ்தனீஸ் ஒத்துழைத்தார்.

பிலோகிரேடஸ், எசினஸ், டெமாஸ்தனீஸ் அடங்கிய பத்து பேர் பிலிப்பைக் காணச் சென்றனர். டெமாஸ்தனீஸ் ஒருவர்தான் பிலிப்பிற்கு சரியானபடி பேசக் கூடியவர்.

சிறிது நாட்களுக்கு விவாதம் செய்து முடிவில் ஓர் உடன்படிக்கைக்கு வந்தனர். உடன்படிக்கையில் கையெழுத்திடுகையில் இருதரப்பாரும் தங்கள் வசம் இருக்கும் இடங்களை அவர்களே வைத்துக்கொள்ளுமாறு ஒப்புக்கொண்டனர்.

ஏதனியர்கள் ஏமாந்துவிட்டனர். அவர்களின் உடன் இருக்கும் இராஜ்யங்களின் பெயர்கள் அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

அதனால் பிலிப் தெஸ்ஸாலியில் இருக்கும் ஹாலஸ் மீதும், தீபிஸ், போசிஸ் மீதும் போரிடலாம் கொந்தளிப்பு உண்டாக்கலாம். அதன்படியே அவனும் செய்தான். ஹாலியர்கள் போகிஷியர்களின் பெயர்கள் உடன

இது தேவையா?

அடுத்த மாத இடையில் தொடங்கயிருக்கும் பாராளு மன்றத்தில் மாகாண மேல்சபை உறுப்பினர் எண்ணிக்கையை மிகுதியாக்கும் ஒரு மசோதாவை இந்திய அரசாங்கம் கொண்டுவருமென்று ஒரு செய்தி கூறுகின்றது. மேல் சபைகளுள்ள மாகாணங்களில் இவ்வெண்ணிக்கை அதிகமாவதோடு மேல்சபையே இதுகாறும் இல்லாத ஆந்திர மாகாணத்தில் புதிதாக அச் சபையொன்று உருவாக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள், சட்டசபைத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகிய பலர் தம்முடைய ஊதியங்களில் எவ்வளவு சதவீதம் குறைத்துக்கொள்வது என்பதைப் பற்றிப் போட்டி நடைபெறும் போது, நிருவாகச் செலவில் எவ்வளவு அதிகமான தன்மையில் சிக்கன முறைகள் கையாளப்பட வேண்டும் என்பதைக் குறித்து அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்திவரும் இக்காலத்தில், இத்தகைய மசோதா தேவையா என்ற வினா எழுகின்றது. இயல்பான காலங்களிலேயே, மக்களாட்சி முறையின் மாண்பிற்குப் புறம்பானதென்றும், தேவையற்றதென்றும், வீண் செலவுக்குக் காரணமானதென்றும் குறை கூறப்பட்டு வரும் மேல் சபைகளை, சிக்கனத்தையே, தலையான குறிக்கோளாக இப்போது கொண்டுள்ள இந்திய அரசாங்கம் வலுப்படுத்துவதற்காக ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வரத் தீர்மானித்திருப்பது பொருத்தமானதாகுமா?

“தமிழ் நாடு” கேட்கிறது!

படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தால் பிலிப் அவர்கள் மீது போரிட முடியாது. அதனால் ஏதனியர்களால் ஒன்றும் செயய முடியவில்லை,

டெமாஸ்தனீஸ் தன் சகாக்களோடு பிலிப்பைக் காணச் சென்ருர். சுலபத்தில் அவர்களால் அவனைக் காண முடியவில்லை. அவர்கள் அவனைக் காணுவதற்குள் பிலிப் சண்டையிட்டுக் கொண்டிருந்த இடங்களைப் பிடித்துவிட்டான்.

டெமாஸ்தனீசிற்குக் கோபம் கொந்தளித்தது. பிலிப் அவருக்கு அளித்த அரசாங்க மரியாதைகளை ஏற்றுக்கொள்ளாமல், விருந்தில் கலந்துக்கொள்ளாமல், தோழர்களுடன் சண்டையிட்டுக் கொண்டு நாடு திரும்பினுர் தனியாக. திரும்பியதும் அவர் தூதுவர்களுக்கு அளிக்கும் கௌரவம், மரியாதை எல்லாம் குழுக்களுக்கு அளிக்கக் கூடாது என்று கூறினுர்.

தனக்குக் கிடைத்த வாய்ப்பை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொண்டான் பிலிப். ஒரு மாதத்திற்குள் அவன் போஷியர்களை ஆக்ரமித்துக்கொண்டு கிரேக்க நாடுகளை ஆளுர், ஏதன்சு தனித்தன்மை பெற்று விளங்கிய 'ஆம்பிக்டையொனிக் கவுன்சி'லில் இடம் பெற்றுவிட்டான்.

இதைக் கண்டு கோபம் கொண்ட ஏதெனியர்கள் சமாதான உடன்படிக்கையைக் கிழித்தெறிய விரும்பினர். டெமாஸ்தனீஸ்தான் உடன்படிக்கை செய்துகொண்ட பின்னர் அதன்படி நடப்பதுதான் சிறந்தது என்று கூறினுர்.

கி. மு. 344-ல் மாசிடொனியரை எதிர்த்து இரண்டாவது பிலிப்பிக் எனப்படும் உயர்ந்த சொற்பொழிவை ஆற்றினுர், டெமாஸ்தனீஸ். மூன்று ஆண்டுகள் கழிந்து மூன்ருவது பிலிபிக் எனப்படும் விடுதலைத் தாகம் மிளிரும் சிறந்த சொற்பொழிவை யாற்றினுர். எந்த மொழியிலேயும் இதுவரை அத்தகைய சொற்பொழிவு ஆற்றபபடவில்லை என்று கூறுவர், அறிஞர்கள்.

டெமாஸ்தனீசும், மற்றவர்களும் பிலிப்பைக் காணச் சென்ற குழுவின் மற்ற அங்கத்தினர்களைக் குற்றஞ்சாட்டினர். ஏசினஸ் எப்படியோ தண்டனையினின்று தப்பி விட்டான்; ஆனுல் பிலோகிரெடஸ் எங்கோ ஓடிவிட்டான்.

கி. மு. 340-ல் சண்டை துவங்கிற்று. முதலில் ஏதனியர்கள் வெற்றி பெற்றனர். ஆனுல் பிலிப்சிரோனியாவில் வெற்றி பெற்ருன் 338 கி. மு.வில்.

ஏதனியர்கள் சண்டையிடத்தான் விரும்பினர், பிலிப் பெர்ஷியாமீது போர் தொடுக்க விழைந்தான். ஏதன்சில் இருக்கும், பிலிப்பை விரும்பும சிலர் எப்படியோ சமாதான உடன்படிக்கை ஏற்படுத்திவிட்டனர். அவர்கள் டெமாஸ்தனீசை பழிவாங்க விரும்பினர்.

டெமாஸ்தனீஸ் மீது குற்றம் மேல் குற்றம் சாட்டினர். எல்லாவற்றையும் எதிர்த்துப் பேசி வெற்றி பெற்ருர் டெமாஸ்தனீஸ். அதுமட்டுமின்றி அவர் தாயகத்திற்காகச் செய்த தொண்டின் மேன்மையை உணர்ந்த ஏதனியர்கள அவரை சிரோனியாவில் வீர சொர்க்கம் எய்திய வீரர்களுக்கு இறுதி மரியாதையின் போது சொற்பொழிவாற்ற பணித்தனர். அதுவும் அவருடைய தலைசிறந்த சொற்பொழிவுகளில் ஒன்று.

மாசிடோனியாவின் பிடி உறுதியாக இருந்ததால் எதிர்த்து போரிட்ட ஏதனியர்களால் இயலவில்லை. கி. மு. 336-ல் பொஷியாவை எதிர்த்து ஹெலனிக் படையை செலுத்துகையில் பிலிப் கொல்லப்பட்டான். எதிர்த்துப் போரிட திட்டங்கள் தீட்டினர்— ஆனுல் மெதுவாக இருபது வயது நிரம்பிய அலெக்சாந்தர் தகுந்த நவைடிக்கைகள் எடுத்தான்.

ஓர் ஆண்டு கழித்து அலெக்சாந்தர் இறந்து விட்டதாக வதந்தி உலவியது. தீபிஸ் மாசிடோனியர்களை எதிர்த்து போரிடக் கிளம்பியது. அதற்கு ஏதன்சும் உதவ வேண்டும் எனறு டெமாஸ்தனீஸ் கூறினுர். பணமும், படையும் அனுப்பினர். அதற்குள் அலெக்சாந்தர் வந்துவிட்டதினுல் அவர்களை அடக்கிவிட்டான. டெமாஸ்தனீஸ் உட்பட பத்து ஏதானிய தலைவர்களை தன் வசம் ஒப்புவிக்குமாறு கூறினுன். சிரோனியாவிற்குப் பிறகு சமாதானம் ஏற்பட உதவிய டெமாடெஸ் அலெக்சாந்தரிடம் வாதாடி சாரிடிமசிறகு மட்டும் தண்டனை வாங்கிக் கொடுத்தான்.

அதற்குப் பிறகு டெமாஸ்தனீஸ் மிகவும் ஜாககிரதையாக இருந்தார். அந்த ஜாக்கிரதையே அவரை அவர் ஆதரித்த வந்த கட்சியினரிடம் சந்தேகம் கிளப்பி விட்டது. இது எடுத்துக்கொடுத்த கையாகிவிட்டது மாசிடொனியர்களுக்கு.

டெசிபொன் என்பவர், சில ஆண்டுகள் கழித்து, டெமாஸ்தனீசிற்கு அவரது தொண்டைப் பாராட்டி ஏதேனும் பரிசும், கௌரவமும் அளிக்கவேண்டுமென்று கூறினுர். அந்த கோரிக்கைக்கு பதில் கொடுத்த மாசிடொனியர் டெமாஸ்தனீஸ் ஒரு அரசியல் துரோகி என்றும் குறிப்பிட்டனர்.

ஏசினஸ், டெமாஸ்தனீசிற்கு அடுத்தபடியான பேச்சாளன் வழக்கைத் திறம்பட நடத்தினுன். டெமாஸ்தனீஸ் துரோகமிழைத்ததாகவும் அவர் அலெக்சாந்தரை எதிர்த்துப் போரிட ஏற்பட்ட

"வளர் பிறை"

—[✕]—

இனி ஜூலை முதல் முஸ்லீம் லீக் மாதமிருமுறை பத்திரிகையாக, அழகிய வடிவில், வீர நடையில் வெளிவரும்.

ஆண்டு சந்தா ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0

தனிப் பிரதி வேண்டுவோர் 4 அணு ஸ்டாம்பு அனுப்புக! ஏஜன்ஸி விரும்புவோர், பிரதி ஒன்றுக்கு 8 அணு வீதம் முன் பணத்துடன எழுதுக.

விவரம் :—

M. A. ரஹ்மான்,
ஆசிரியர்,
"வளர் பிறை" (மாதமிருமுறை)
கோட்டை — சேலம்.

வாய்ப்புக்களை பயன் படுத்திக் கொள்ளவில்லை என்றும் குற்றம் சாட்டினான் ஏசினஸ். வழக்கு யார் மீது தொடக்கப்பட்டதோ அவர்கள்தான் பதில் கொடுக்க வேண்டும் என்றும் கூறினான்.

அவருடைய சிறந்த சொற்பொழிவுகளில் ஒன்றாகக் கருதப்படும் 'முடியைப் பற்றி' என்னும் பேச்சுத்தான் அவர் தன்மீது போடப்பட்ட குற்றச்சாட்டுக்கு பதிலாகப் பேசியது. வெற்றி அவர் பக்கம்தான். ஏசினஸ் அவமான மடைந்து ஏதன்ஸை விட்டு வெளியேறினான்.

பிறகு ஏசினஸ் ஒரு பள்ளிக்கூடத்தில் பணியாற்றுகையில் அவனுடைய கஷ்டத்தைக் காணச் சகியாத டெமாஸ்தனீஸ் பணமும், பொருளும் கொடுத்து உதவினார் என்று அவருடைய மேன்மையான குணத்தைப்பற்றி குறிப்பிடுவர்.

கி. மு. 324ல் அலெக்சாந்தரின் மந்திரியான ஹார்பாலஸ் என்பவன் படையுடனும், பெரும் பணத்துடன் (இருபது லட்சம் ரூபாய்களுக்குமேல்) ஓடிவந்து விட்டான் ஏதன்சிற்கு. ஏதானியர்களில்சிலர் அவனுடைய உதவியைக் கொண்டு அலெக்சாந்தரை எதிர்க்க எண்ணினர். ஆனால், டெமாஸ்தனீஸ் அதற்கு உடன்படவில்லை.

அவனை ஓர் அகதிபோன்று ஏற்றுக்கொண்டார், அவர். மாசிடான் ஹார்பாலஸை அனுப்புமாறும், பணத்தைக் கொடுக்குமாறும் கேட்டது. டெமாஸ்தனீஸ் உடன்பட்டார்.

ஹார்பாலஸ் தப்பியோடிவிட்டான். பணத்தை எண்ணுமாறு மாசிடோனியா கூறிற்று. பாதிக்கு மேல் பணம் மறைந்துவிட்டிருந்தது. அதைக் கண்டுபிடிக்க ஒரு குழு அமைக்குமாறு டெமாஸ்தனீஸ் கூறினார். சிறிது தாமதத்திற்குப் பிறகு ஒரு பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் முதல் பெயர் டெமாஸ்தனீசுடையது. பணத்தைக் களவாடிய குற்றம் சாட்டப்பட்டார். தீர்ப்பு அவருக்கு எதிராக இருந்தது. ஒன்றரை இலட்சம் ரூபாய வரை கட்ட இயலாத அவர் டுரொஜினீக்கு வெளியேற்றப்பட்டார்.

ஓராண்டிற்குள் அலெக்சாந்தர் இறந்தசேதி வந்தது. டெமாஸ்தனீஸ் பின்னர் வரவழைக்கப்பட்டார். மறுபடியும் போருக்கு ஆயத்தமானார்கள். பழைய செல்வாக்கு பெற்றார்.

அவர் ஹைபரீசுடன் சேர்ந்துக் கொண்டு போருக்கு ஏற்ற பணிகள் செய்தார்.

அலெக்சாந்தருக்குப் பிறகு அவருடைய தளபதிகளில் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுடன் சண்டையிட்டனர். தெஸ்ஸாலியில் ஏதானியர்கள் வெற்றி பெற்றனர். ஆனால், எதிர்பாராதவிதமாக ஏதானிய தளபதி லியோஸ்தனீஸ் கொல்லப்பட்டார். விளைவு வேறு விதமாக இருந்தது, ஏதனியர்கள் தோற்றுவிட்டனர்.

வெற்றி பெற்ற மாசிடோனியர்கள் டெமாஸ்தனீசை அனுப்பச் சொல்லினர்.

டெமாஸ்தனீஸ் கலாரியாவுக்கு ஓடி போசைடன் என்னும் கோயிலில் சரணடைந்தார். அவரைத் துரத்தி ஆர்கியாஸ் என்பவன் படையுடன் வந்தான், டெமாஸ்தனீசை கோயிலில் கொல்ல விரும்பாத அவன் வெளியே வரச் சொன்னான்.

கடிதம் எழுதிவிட்டு வருவதாகக் கூறி எழுதுகோலை எடுத்து வாயில் வைத்து கடித்தார். எழுதுகோலில் இருந்த நஞ்சு அவர் உடலில் புகுந்துவிட்டது. வெளியில் இருந்தவர்கள் உள்ளே வருமுன் டெமாஸ்தனீஸ் தட்டுத் தடுமாறி கீழே விழுந்தார். பின் இறந்தார்.

தோல்வியின் முனையிலே தற்கொலை செய்துகொண்டு மடிந்தார் டெமாஸ்தனீஸ்.

'பேச்சுக்கலையின் மன்னன்' என்று சிசரோவால் புகழப்பட்டிருர், அவர். உலகத்தின் தலை சிறந்த பேச்சாளர்களான சிசரோ, பர்க் இவர்களின் பேச்சுக்களில் கூட அவரது சாயல் தென்படும். அத்தகைய தலைவனுக்கு ஏதானியர்கள் உரிய மரியாதை யளித்தனர்.

★

அந்தோ 'பாரதம்!'

—[★]—

டில்லி, அமெரிக்க சர்க்காருக்கு வருத்தம் தெரிவித்திருக்கிறது! எதற்குத் தெரியுமா? அகமதாபாத்துக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில், இரண்டு அமெரிக்க மாதர்களைப் போட்டு அடித்து நொறுக்கி விட்டனராம்! அகமதாபாத் வட்டாரத்தில் கடந்த ஒரு மாதகாலமாக பிள்ளைகள் காணமற்போய்க் கொண்டிருக்கின்றனவாம். அங்கே அமெரிக்க தொழில் உதவிக் குழுவைச் சேர்ந்த இந்த இரண்டு அமெரிக்கப் பெண்மணிகளும், ஒரு 'ஜீப்'பில், ராஜ்கோட்டிலிருந்து போய்க்கொண்டிருந்திருக்கிறார்கள். வழியில் எப்படிப் போவது என்று தெரியாமல் காரை நிறுத்தி, அங்கே நின்றுகொண்டிருந்த பையன்கள் சிலரைப் பார்த்து, வழிகேட்டிருக்கிறார்கள். ஆங்கிலம் புரியாத இக்குழந்தைகள், அருகிலிருந்த கிராமத்தாரிடம் போய், பிள்ளை பிடிப்பவர்கள் வந்திருப்பதாகச் சொல்லினர்! அவ்வளவு தான், தடியும் கம்பும் எடுத்துக் கொண்டுவந்து. விட்டேன் பிடி என்று போட்டு அந்த அமெரிக்க மாதரைத் தாக்கிவிட்டார்கள் — அவர்கள்!! டிரைவர் எப்படியோ காரை விட்டுக்கொண்டு இன்னொரு கிராமத்துக்குப் போக அங்கேயும், அந்தக் கிராமத்து மக்கள் கற்களால் தாக்கி அடிக்க ஆரம்பித்திருக்கின்றனர் — விபரமறிந்த ஒரு பள்ளி ஆசிரியர் குறுக்கிட்டு விலக்கவே, தப்பித்திருக்கிறார்கள் இரண்டு அமெரிக்க மாதரும்!! எப்படி, 'பாரதத்தின்' நிலைமை?

"பட்ஜட்" அரிச்சுவடி

"பட்ஜட்! பட்ஜட்!" என்று சொல்லுகிருர்களே, இதன் பொருள் என்ன? செச்சே, இதுவாத் தெரியாது, 'வரவு செலவுத் திட்டம்' என்று உடனே பதிலளிப்பீர்கள்! உண்மையில், பட்ஜட் என்ருல், அதல்ல பொருள். பிரிட்டிஷ் நிதிமந்திரி, ஆண்டுக்கொருமுறை நாட்டின் நிதி நிலைமைகளைப் பற்றிய விபரங்களை ஒரு தோல் பையில் வைத்து, பார்லிமெண்டுக்குக் கொண்டு வருவது வழக்கம். அதைக் காணும்போது "பட்ஜட் வருகிறது!" என்று அந்தத் தோல் பையைக் குறிப்பிடுச் சொல்வதுண்டு உறுப்பினர்கள். அது பிறகு, தோல்பை என்பது போய் வரவு செலவுத் திட்டத்தையே குறிப்பதாகி விட்டது! இந்திய அரசியலமைப்பில் ஒரு இடத்திலாவது 'பட்ஜட்' என்கிற வாசகம் கிடையாது. அதற்குப் பதில், 'ஆண்டு நிதி அறிக்கை என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

*

ஒரு அரசாங்கம் செய்யும் சகல செலவுகளையும் சட்டசபை அங்கீகரிக்க வேண்டும் என்பது ஜனநாயகத்தின் இன்றியமையாத கடமையாகும். அமைச்சர். 'அதைச் செய்' என்று உத்திரவிடவும், அந்த உத்திரவைக் கையெழுத்திட்டு செகரட்டரி அமுலாக்குவதும் இயற்கை. ஆனல் இவர்கள் எவருக்கும் சர்க்காரின் 'கஜானு'வில் கை வைக்கும் அதிகாரம் கிடையாது. சட்டசபை, 'செய்' என்று சொல்வதை நிறைவேற்றும், 'ஏஜண்டு'கள் தான் இவர்கள். சட்டசபை ஒவ்வொரு நாளும் கூடி வரவென்ன, செலவென்ன என்று பார்க்க முடியாதல்லவா? அதனல், ஓராண்டுக்கு நாட்டில் நடைபெறவிருக்கும் செலவினங்களையும், அதற்கு வருகிற வருமானத்தையும் பற்றி, ஒரு அறிக்கை தயாரிக்கும் இம்முறை அமுல் நடத்தப்படுகிறது.

*

இப்படி சட்டசபை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டு நிர்வாகிகள் சரியாகப் பணத்தைச் செலவழிக்கிருர்களா என்று பார்த்துக்கொள்வதற்காக இருப்பவர்தான் ஆடிடர் ஜெனரல். இவர் மந்திரி சபைக்கோ, சட்ட சபைக்கோக் கட்டுப்பட்டவரல்ல; தனித் தன்மை கொண்டவர். இவர் பதில் சொல்ல வேண்டிய தெல்லாம், இந்தியக் குடியரசுத் தலைவருக்குத்தான்! இவர் வசம், செலவழிக்கப்படுவது பற்றிய விபரங்கள் இருக்கும். இவருக்குக் கீழே உள்ள அதிகாரிகள், சர்க்காருடைய கஜானுக்களில் எல்லாம் உட்கார்ந்து, கணக்குகளையெல்லாம் எடுப்பார்கள். சட்டசபை அனுமதித்தற்கு மேல், அதிகப்படியாக எதுவும் செலவாகிவிடாமல், கவனித்துக் கொள்வது இவர்தான்.

*

ஓராண்டு முடிந்ததும், அக்கவுண்டண்ட் ஜெனரல், அந்த ஆண்டில் நடைபெற்ற நிதியினங்களைப் பற்றிய விபரங்களை அனுப்புவார். நிர்வாகத்தினரின் ஊழல்கள், அதிகமாக செய்தார்களா, கொஞ்சமாகவா, வரி வசூலைச் சரிவரச் செய்தார்களா இல்லையா, அநாவசியமாகச் செலவழிந்ததுண்டா என்பது போன்ற விபரங்களைத் தொகுத்து அனுப்புவார். இதை, சட்டசபையால் நியமனம் செய்யப்பட்ட ஒரு கமிட்டி பரிசீலனை செய்யும். இக் கமிட்டிக்கு ஒத்தாசையாக அக்கவுண்டண்ட் ஜனரல் இருப்பார். இந்தக் கமிட்டி சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளை அழைத்து, ஏன், எப்படி என்கிற விபரங்களைக் கேட்டு. அவர்கள் தரும் விளக்கங்களைப் பரிசீலித்து, செய்யும் சிபார்சுகள் சட்டசபை முன் வரும். இதனல், தாங்கள் அனுமதித்த ஆண்டுச் செலவுகள், ஒழுங்காகச் செய்யப்பட்டதா என்று பார்க்கும் வாய்ப்பு சட்டசபைக்கு உண்டு.

*

ஒவ்வொரு, சர்க்கார் இலாகாவும் பற்பல திட்டங்களைப் போடலாம். அவை அனைத்தையும் ஒரேயடியாக நிறைவேற்ற சர்க்காரிடம் பணம் இருக்க வேண்டுமே! அதனல், எதெது முக்கியம் எந்தெந்த திட்டங்களால் மக்களுக்கு நன்மை, எந்தெந்த திட்டங்கள் மூலம் அரசாங்கத்துக்கு வருமானம் வரும், என்பவைகளையெல்லாம் 'பட்ஜட்'டுக்கு முன் பரிசீலிக்கப்படும். இதற்காக தத்தம் யோசனைகளையும் தேவைகளையும் ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் கூறுமாறு, எல்லா இலாகாக்களையும் சர்க்கார் கேட்கும். இப்போது இருப்பவைகள் அப்படியே நடப்பது; புதிதாகச் செய்யப்பட வேண்டியது — என்கிற இரு தலைப்புகளில் விபரங்களைக் கேட்கும். இப்போது இருப்பவைகளை அப்படியே நடத்துவதற்கு வேண்டிய சலுகைகள் முதலில் கவனிக்கப்படும். இதை, கடந்த ஆண்டு வருமானத்தை வைத்து, நிதி இலாகா தீர்மானிக்கும். இதை நிதி அமைச்சர், மந்திரி சபையின பார்வைக்கு வைப்பார்.

*

இரண்டாவதாகச் சொல்லப்பட்ட புதிய திட்டங்கள் உள்ளனவே, இவைதான் பட்ஜட்டிலேயே, முக்கியத்துவம் உடையதாகும். இத் திட்டங்களுக்குத் தேவையான பணம், சர்க்காரிடம் கொஞ்சமாக இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம், என்ன செய்வது? சர்க்கார் வரவுக்கு ஏற்றபடிதானே செலவு செய்ய வேண்டும்! ஆகவே, மந்திரி சபையின் கமிட்டியொன்ருல் இதுபற்றி ஆலோசிக்கப்படும். மிகமிக முக்கியம் என்று கருதப்படுபவைகளைப் பற்றி ஆராய்ந்து, பிறகு மந்திரிகள் அனைவருமே உட்கார்ந்து கவனிப்பார்கள்.

*

இதற்கிடையில், புதிய திட்டங்களை மேற்கொள்வதால், தேவைப்படுகிற பணத்துக்கு, என்னென்ன புதிய வரிகளைப் போடலாம், அதிகரிக்கலாம் என்பதுபற்றி நிதி இலாகா யோசனைகள் செய்யும். இந்த யோசனைகளை, மந்திரிகள் அனைவரும் உட்கார்ந்து, ஆலோசிப்பார்கள்-எந்தத் திட்டத்தைக் கைவிடலாம், எது மிக முக்கியம், அதற்கு எந்த வரிகளை விதிக்கலாம் என்று கவனிப்பார்கள். அது சம்பந்தமான வரிப பிரரேபனைகள் தயார் செய்யப்படும். இப்படித் தயாரிக்கப்படுகிற புதிய வரி இனங்கள் முன கூட்டியே தெரிநதுவிட்டால், சம்பந்தப்பட்டவர்கள் பொருள்களைப பதுக்கவும, ஷேர் மார்க்கெட்டுகளைப பாதிக்கவும் செய்யும் என்பதால்தான், பட்ஜட் விஷயங்கள் பரம இரகசியமாகக் கருதப்படுகின்றன!!

*

4-பக்கத் தொடர்ச்சி

கொடிதூக்கியகுப்பனும், தியாகி திருமலையும், சத்யாக்கிரக சாமிநாதனும், ஆகஸ்டு ஆறுமுகமும், காங்கிரஸ் கட்சி ஒரு 'மடம்' போல ஆகவேண்டுமென்று, தியாகம் பல செய்தனர்! ஒருக்காலுமில்லை, இப்போதும் அவர்கள், காங்கிரஸ் கட்சியை வேதனைத் தீர்க்கும் கூடம் என்றே மனதார நம்புகின்றனர் — நேருவின் இலண்டன் கூற்றுப்படி, இவர்கள் எல்லாம் பாமரர்கள்—இந்தப் பாமரர்கள், நேருவை மடாதிபதியாக்கவும் எண்ணியதில்லை. ஆனால், காங்கிரசை மடமாக்கியது, நேரு போன்ற தலைவர்கள்தான்! பிடியிலிருந்து விலகி, ஆண்டால் போதும், தமது ஆதிக்கம் நிலைத்தால் போதும் என்று கருதி, பாம்புகளையும், பச்சோந்திகளையும் காங்கிரஸ் கூடத்துக்குள் கொண்டுவர முனையும் காமராசர்களை, நேரு கண்டித்திருந்தால் கட்சி, மடம் ஆகவா நேரும்? வாளாஇருந்தார் நேரு! அவர் வார்த்தைதான் சட்டம், காங்கிரசில்—எனினும் பேசாதிருந்தார்! மகாராசாக்களும், நிலப் பிரபுக்களும், டாடாக்களும், பிர்லாக்களும், கூடம் நோக்கி வலம் வருவது அறிவார், அவர்—கண்டிக்கவில்லை, கந்தனும் குப்பனும்தான் பெரிது அந்தப் பாமரர்களே நமது கட்சியின் நாடி நரம்புகள், என்று எடுத்துக் கூறவில்லை—இதுபோது டென்மார்க் விருந்தும், பின்லாந்து பெருமையும், காமன்வெல்த் கைலாகும் தரும். 'போதை'யுள்ளதே அதற்கு இவரும் ஆளானார்! பின்னர், கட்சி மடமாகிவிட்டது — மடாதிபதியைச் சுற்றி வேடிக்கை வேடிக்கையான சிஷ்ய கோடிகள் உலவுகிறார்கள்!!

மடத்துக்குள் நடைபெறும் அட்டகாசங்கள், மனங் குலையும் நிகழ்ச்சிகளைப் பற்றி, எல்லோருக்கும் தெரியும் என்றாலும், அதைக் கண்டிக்காமல் கொண்டாடுவதே லாபம் தரக்கூடியது என்று எத்தனை 'எத்தர்கள்' இருக்கிறார்கள்! அதுபோல், காங்கிரசுக்குள்ளும் அகப்பட்டதைச் சுருட்டுவோர் கூடுகிறார்கள் — 'மகந்து'வைப் பார்க்கிறபோது, புகழ் பாடிவிட்டு, அவர் அப்பால் போனதும் அவர் எப்படி தெரியுமா என்று பேசிக்கொண்டு. குழம்பிய குட்டையில் வலை வீசிய வண்ணம் உள்ளனர்!!

நேரு, அவர்கள் புகழ் பாடும்போது, மகிழ்கிறார்—கண்டிப்பதில்லை! 'போதை'க்கு ஆட்படுகிறார்—மறுப்பதில்லை! உள்ளம், ஓரோர் சமயம், விழித்துக்கொள்ளும்போது, பாமரனைப் பற்றி நினைக்கிறார், பதறுகிறார், பிறர் மீது பாய்கிறார்!!

ஒருதரம் பதவி நாற்காலியில் அமர்ந்துவிட்டால், விடாமல், அட்டைபோல் ஒட்டிக்கொள்கிறார்கள்.

தீட்டிய மடலில், ஒரு பகுதி இது! காங்கிரஸ்காரர்கள், அட்டைபோல், ஒட்டிக்கொள்கிறார்களாம்—பதவி ஆசையே அவர்களுக்கு இலட்சியமாகி விட்டதாம்—இதனால், பாமர மக்களை அவர்கள் ஏறெடுத்தும் பார்ப்பது கிடையாதாம்.

சரியான சூடுதான்! ஆனால், இப்படி ஏனையோரைப் பற்றிக் கூறும், இவர் என்ன செய்தார்? ஆண்டு பத்தாக, இவரே, பிரதமர்! முனபிருந்த பிரசாத்தே, குடியரசுத் தலைவர்—ராதாகிருஷ்ணனுக்கும் அதே பதவி—பழைய மொந்தை — அப்படியேதானே உள்ளது! போதனை செய்யும் இவர் அன்றோ ஒரு உதாரணமாகி, கேடுகளைக் களைந்து, பாமர மக்களின்பால் போய் நின்று, பழகுதல் வேண்டும். இவர், அதே இடத்திலிருக்கிறார்! அதே சமயத்தில், ஏனையோருக்கு, மடல் தீட்டுகிறார் — என்னை 'மகந்து' ஆக்கிவிட்டீர்களே, என்று!!

"கடந்த தேர்தலின்போது கேள்விப்பட்டேன். பல இடங்களில் காங்கிரஸ்காரர்கள், குரல் வளையைப் பிடித்துக் கொண்டதாக!"

கேள்விப்பட்டாராம்! கேள்விப்பட்டதும், என்ன செய்தார்? அப்படி, M. L. A. பதவிக்காகச் சிண்டு பிடித்துக் கொண்டிருந்தவர்களைக் கூப்பிட்டு கண்டித்தாரா? கிடையாது! நெடும்பலம் ராமலிங்கமும், செட்டிநாட்டரசரும் சுகமாக நுழைந்தார்கள், காங்கிரஸ் கூடத்துக்குள்—சா. கணேசனும், வேலூர் மாசிலாமணி போன்றோரும் விம்மியபடியே, வெளியே நின்றனர். கூப்பிட்டு, நியாயம் வழங்கினாரா? இல்லை! ஏனெனில், அது காமராஜருக்கு, வருத்தம் அளிக்கக்கூடும்—காமராஜோ தன் பக்கம் நிற்பவர், துதி பாடுகிறவர். இப்படி, விட்டுவிட்டு, இப்போது மட்டும் சாடுகிறார், "என்னையும் அசல் மடாதிபதி ஆக்கிவிட்டீர்களே!!", என்று.

மற்றவர்கள், மகந்துவாக்கினாலும், உலகெல்லாம் உணர்ந்த இவர் எப்படி ஒப்பலாம்! மடபீடத்தை விட்டுக் குதித்து, நான் மடாதிபதி ஆகமாட்டேன்; மக்கள் வசம்தான் இருப்பேன் என்று கூறியிருக்கலாமே—கையைப் பிடித்து, இவர் விருப்பத்துக்கு எதிராக, கட்டாயமா செய்ய இயலும்? எனினும், மடல் விடுக்கிறார்! கடல்போல வருகிறது, கண்ணீர் எனக் காட்டுகிறார்!!

நேரு அவர்கள் இவ்விதம் தனனை மகந்துவாக்கிவிட்டார்கள் என்று குறைபடுகிற அதே சமயத்தில், தேபர் ஒன்று செப்புகிறார்—ராஜ்கோட்டில் பேசிய போது,

"இப்படி, ஏகதலைவ வழிபாடு இருக்கிற வரையிலும், காங்கிரஸ் வளராது."

காங்கிரஸ் வளராதாம்! ஏன்? ஏகதலைவ வழிபாடு உள்ள வரையில்!

இப்படி ஏக தலைவராக, யாரைக் கொண்டாடுகிறார்கள்? நேரு பண்டிதரை! இது குறைவாகப் படுகிறது, தேபருக்கு. நேரு, ஊரில் இல்லாத சமயம் பார்த்து, இதை உரைக்கிறார், தேபர். கட்சித் தலைவரல்லவா? கட்சிக்குள், இப்படி வளர்ந்திருக்கும் குறை, கண்ணில் படுகிறது! எல்லாரும், எதற்கெடுத்தாலும், நேரு நேரு என்கிறார்களே, இப்படி ஏகதலைவ வழிபாடு இருந்தால் எப்படி, என்று மனவேதனையுடனேயே வெளியிடுகிறார்!! பாவம் — பீடத்தில் அமர மட்டும், தான்—அதிகாரம் செலுத்த இன்னொருவர், என்கிற உள்ளக் குடைச்சல் போலும். அவரும் மனிதர்தானே?

இப்படி ஏனையோர் மீது பழியைச் சுமத்தும் தேபர், எப்படியிருக்கிறார்? ஏகதலைவ வழிபாடு கூடாது எனக் கொக்கரிக்கிறாரே, இவர் நடைமுறையில் நடந்து காட்டுகிறாரா? கிடையாது! பிறருக்குப் போதிக்கிறார், அவ்வளவுதான். நேருவைக் கண்டுவிட்டால், இவர் பாடும் ஆட்டம்தான்! இப்படித் **தங்கள் தவறுகளைப் பிறர் மீது தூக்கி வீசுவதில்தான் ஒவ்வொருவரும்**

இருக்கிறார்களே ஒழிய. ஒருவருக்காவது உள்ளத்தில், களங்கமில்லாமலில்லை. அந்தக் களங்கத்தை மறைக்க, பிறர் மீது குற்றங்களை அள்ளி வீசுகிறார்கள்.

இந்தக் குற்றங்களைத் தாங்க வேண்டிய பாமரனும் சரி, கட்சியின் மீது பாசம் கொண்டவனும் சரி, நொந்த உள்ளத்தோடு முணுமுணுக்காமலில்லை.

மடாதிபதி சரியாயிருந்தால், மடம் சீர்திருந்திவிடுகிறது அவரே, இப்படியிருக்கிறாரே!

இப்படி நேரு பேசுவதும், மடல் மூலம் கண்ணீரைக் காட்டுவதும், எந்தவிதப் பயனையும் தரப்போவதில்லை என்று துணிந்து கூறுகிறார் மராட்டிய காங்கிரஸ் வீரர் காட்கில்!

பேசிப்பேசி, திருத்தவேண்டும், வளர்க்க வேண்டும், கட்டுப்பாட்டை அதிகரிக்க வேண்டும் என்று வானளாவ முழக்கமிடுகிறீர்களே? என்ன பிரயோசனம்!

புதிய பேனாவை பெற்றதன் மூலமே மாணவனது இலக்கணத் தவறுகள் திருந்திவிடுமா—என்று கேட்கிறார்!

புதிய பேனா, என்று கூறுவது, இப்படி நேருவும் பிறரும் செய்ய விரும்பும், புதியசீர்திருத்தங்களை. எவ்வளவு சீர்திருத்தம் செய்தால் தான் என்ன, காங்கிரஸ் கட்சியை பழைய கட்சியைப்போல ஆக்க முடியாது! அப்போதிருந்த ஆர்வமும தியாக உணர்ச்சியும், ஏற்பட இயலாது! —என்றார், காட்கில். புதிய பேனா! இலக்கணத் தவறுகள்!! — இதைவிட, நல்ல உதாரணம கிடைக்காது. சீர்கேடுற்ற இந்த நிலையைப் பார்க்கிறபோது. ஓரோர் சமயம், நேருவுக்கு உணர்ச்சி பிறக்கிறது— எழுதித் தள்ளுகிறார், மடல்களை! என்ன பிரயோசனம், பாமரனுக்கு காமன்வெல்த் அமைப்பால்?— என்றும கேட்கிறார்! ஆனால் அடுத்த விநாடியோ, தன் கேள்விகளுக்கு விடைகாணுவதில்லை— விமானமும் விருந்தும், வந்தப் போதையுமாகவே, ஆகிவிடுகிறார். இதனால், பாமரருக்கு என்ன பயன்!!

★

★ நாடு எது? ★

நாடு எது என்பதைப் பற்றிப் புலவர் பெருமான் என்ன சொல்கின்றார் என்று பார்க்கலாம். நாடு எனப் பிரிக்கப்பட்ட எல்லாம் நாடாகாது. மனித வடிவந் தாங்கிய எல்லோரையும் மனிதராக ஏற்றுக்கொள்ள அறிஞர் இசைவதில்லை. மனிதருக்குரிய குணம், செயல் வேண்டும்; அவை கொண்டோரே மனிதராகக் கொள்ளப் பெறுகிறார். நாட்டிற்குச் சில இயல்புகள் வேண்டும்; அவை பொருந்தியதே நாடு என்றும், மற்றது நாடல்ல எனவும் வள்ளுவர் தமது தமிழ் அறத்தில் சாற்றுகின்றார். குறையாத விளைச்சல் எங்கிருக்கின்றதோ அதுதான் நாடு. தக்கவர்கள் இருக்குமிடம் எதுவோ அதுவே நாடு. கேடில்லாத செல்வமுடையார் எங்கு உறைகின்றனரோ, அவ்விடமே நாடு என்ற பெயருக்கு உரிமை உடையது.

> "தள்ளா விளையுளும் தக்காரும்
> தாழ்விலாச்
> செல்வரும் சேர்வது நாடு."

நாடு என்று ஒன்று இருக்குமானால் அங்கு பசி யிருக்கக்கூடாது; பிணியிருத்தல் ஆகாது; பகை தலை காட்டப்படாது; பெரும் பசியும் தீராத நோயும் அழிக்கும் பகையும் இல்லாது நடப்பதே நாடு.

> "உறுபசியும் ஓவாப் பிணியும்
> செறுபகையும்
> சேராது இயல்வது நாடு."

நாடு என்று ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், அந்நாட்டிலுள்ளார் சிரமப்பட்டுத் தேடிச் சேர்க்கும் நிலையிருக்கக்கூடாது; தேடாமல் அடையும் செல்வம் உடையதையே நாடு என்று கூறுவர்;

"நாடா வளத்தன நாடென்ப" தேடி வருந்தச் செல்வம் கொடுக்கும் நாடு நாடாகமாட்டாது.

"நாட வளந்தரும் நாடு நாடல்ல" வள்ளுவர் கண்ட நாட்டிற்கும், இன்று நாம் காணும் ஒன்றுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா? இன்று பசியினால் மடிவோர் தொகைக்கும், பிணியினால் சாவோர் கணக்குக்கும் பகையினால் அழிவோர் எண்ணிக்கைக்கும் எல்லையுண்டா? வள்ளுவர் கொள்கைப்படி இந்நாள் நாம் வாழும் இடத்தை நாடு என்று சொல்லவே முடியாது.

வள்ளுவர் வாழ்ந்த நாட்டை மகாகவி பாரதியார் அகக் கண்ணால் கண்டு மகிழ்ந்தார். அக்காட்சி பின் வரும் பா வடிவத்தோடு விளங்குகின்றது.

> "நீலமுடி தரித்தபல
> மலைசேர் நாடு
> நீர் அமுதம் எனப்பாய்ந்து
> நிரம்பும் நாடு
> கோலமுறு பயன்மரங்கள்
> செறிந்து வாழும்
> குளிர்காவும் சோலைகளும்
> குலவும் நாடு
> ஞாலமெலாம் பசியின்றிக்
> காத்தல் வல்ல.
> நன்செய்யும் புன்செய்யும்
> நலமிக் கோங்கப்
> பாலடையும் நறுநெய்யும்
> தேனும் உண்டு
> பண்ணவர்போல் மக்களெலாம்
> பயிலும் நாடு.

பாலும் நெய்யும் தேனும் பருகிக் களித்து வாழ்ந்த மக்களின் இன்றைய நிலையென்ன? ஞாலம் எலாம் பசியின்றிக் காத்தல் வல்ல - உலகம் முழுதுக்கும் உணவு கொடுக்கும் வசதி பெற்ற இந்தியா, ஏன் இன்று உணவுக்குப் பிறநாட்டை எதிர் நோக்கி நிற்கிறது? காரணம் பிறர் ஆட்சியே என்று சொல்லியா தெரிய வேண்டும்!

அதையும் சொல்லுகின்றார் வள்ளுவர் நாடு என்ற அதிகாரத்திலேயே.

> "பல்குழுவும் பாழ்செய்யும்
> உட்பகையும் வேந்து அலைக்கும்
> கொல்குறும்பும் இல்லதுநாடு."

பல்குழு: பல வேறுபட்ட கூட்டம். பாழ் செய்யும் உட்பகை: பாழ் படுத்துகின்ற உள்நாட்டுத் கலகம். வேந்து அலைக்கும் கொல்குறும்பு: அரசனை அல்லது அரசியலை அலையச் செய்யும் கொல்வினைக் குறும்புக் கூட்டம். இல்லது நாடு: இவைகளையெல்லாம் எது பெறவில்லையோ அதுவே நாடு. இவற்றில் இந்நாள் இங்கு எது இல்லை என்று காண்பதற்கு நீண்ட நுணுகிய ஆராய்ச்சி தேவையில்லை.

> "ஆங்கமைவு எய்தியக் கண்ணும்
> பயமின்றே
> வேந்தமைவு இல்லாத நாடு"

என்று நாடு என்ற அதிகாரத்தின் கடைசிப் பாட்டில் கூறுகின்றார்.

வேந்தியலோடு பொருந்தும் குடிகள் இல்லாத நாடு எல்லாப் பொருத்தங்களும் பெற்றிருந்தாலும் பயன் பெறாது என்பது இக்குறள் கருத்து.

மக்களுக்கு அரசியல் பொருந்தவில்லையானால் அந்நிலையிலுள்ள ஒன்று வள்ளுவர் கூற்றுப்படி நாடு என்று சொல்லக்கூடிய தகுதியைப் பெறாது என்பதை நாம் நடைமுறையில் கண்டோம்.

[காங்கிரசின் பழையவர்களில் ஒருவரான, ராம. சொக்கலிங்கம் சுதந்திரத்துக்கு முன் தீட்டிய கட்டுரை இது.]

விடை, கண்டதுண்டா!

சென்னை சர்க்காரின் ஊழல்கள் பற்றி 'ஆடிட் ஜனரல்' தரும், விபரங்கள்

ஒரு குறிப்பிட்ட விவசாய இன்ஜினியரிங் ஸ்டோரில் 1950-ல் இருந்தே சரியான மேற்பார்வை இல்லாமலும், இருப்புகள் கணக்கெடுக்கப்படாமலும் விட்டு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

பம்பு செட்டுகள் விற்கும்போது உயர்ந்த வகை செட்டுகளை அதன் விலையைவிட மிகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்ட சம்பவங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன.

இருப்பு இருக்க வேண்டிய பல பொருள்கள் உண்மையாக இருக்க வேண்டியதைவிட குறைந்திருக்கின்றன. அவை எங்கு போயிற்றென்றே தெரியவில்லை.

ஒரு மாவட்ட சப்ளை அதிகாரியிடமிருந்து 1949-ல் இன்னொரு மாவட்டகலெக்டருக்கு ரூ. 5-லட்சத்து 5-ஆயிரம் பெறுமானமுள்ள அரிசி வந்தது. அந்த அரிசி மத்திய கூட்டுறவு இலாகாவுக்கு தரப்பட்டது. இதற்கான பணத்தை வசூலிக்கப்படாமல் பல ஆண்டுகளுக்கு விடப்பட்டது. 1947—48-ம் ஆண்டு விற்பனையான அரிசிக்கான ரூ. 1-இலட்சத்து 23-ஆயிரம் சர்க்காருக்கு வந்து சேரவே இல்லை என்று 1954-ல் தெரிய வந்தது. அப்புறம் அங்கும் இங்கும் ஏதேதோ சரி செய்ததில் சர்க்காருக்கு 75-ஆயிரம் நஷ்டம் ஏற்பட்டது.

விவசாய இலாகாவின் கீழுள்ள பல ஸ்டோர்களில் ஆயில் என்ஜின்கள், பம்பு செட்டுகள் முதலியவற்றின் கையிருப்பு ரூ. 66,386 பெறுமளவுக்குக் குறைகிறது. இன்னொரு சர்க்காருக்கு 1602-அடி ஜி. ஐ. குழாய்கள் கொடுத்துவிட்டு, கணக்கில் 5602 அடி, என்று எழுதப்பட்டுள்ளது.

1953-ல் கப்பலில் இருந்து ஒரு மாவட்டத்துக்கு அரிசி கொண்டுவரப்பட்டது. அப்படி அந்த அரிசி துறைமுகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பிறகு பார்த்தபோது ரூ. 1,92,151 பெறுமான அரிசி குறைந்தது. இது சம்பந்தமாக எழுப்பப்பட்ட நஷ்டஈடு பிரச்னைகளை கப்பல் கம்பெனிகள் நிராகரித்துவிட்டன.

நீர் இலாகாவில் ஒரு பென்ஷனர் 6-ஆண்டுக்காலமாக ரூ. 3,25,137 வரை கையாடியிருந்தும் அவ்வளவு நீண்ட காலம்வரை அது சர்க்காரால் கண்டுபிடிக்கப்படாமலேயே இருந்தது.

ஒரு கப்பல் கம்பெனிக்கு ரூ. 4,23,100-ம் பின்னர் ரூ. 7,10,400 கடனாக கொடுக்கப்பட்டது. இதில் ரூ. 76,215-ஐத்தான் அந்தக் கம்பெனி திருப்பிக் கொடுத்தது. மீதியைத் திருப்பித் தராதபடி, அக்கம்பெனி திவாலாகிவிட்டது.

பல திட்டங்கள் சம்பந்தமாகத் தொழில் நுணுக்கப் பரிசீலனை முடிவு பெறு முன்னதாகவே குழாய் சாமான்கள் ஏராளமாக வாங்கி வைக்கப்பட்டன. இதன் விளைவாகத் திட்டங்கள் பூர்த்தியடைந்த பின்புகூட ரூ. 9-லட்சம் பெறுமான சாமான்கள் உபரியாய் விட்டன.

தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்வதற்கு வர்ணச் சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டன. இது ஆட்சேபிக்கப்பட்டதால், அந்தச் சுவரொட்டிகள் உபயோகிக்கப்படவில்லை.

கோர்ட் அலுவல்களுக்காக ரூ. 20-லட்சம் செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. கட்டிடம் சரியாகக் கட்டப்படாததால் அதைப் பழுது பார்க்க 28-லட்ச ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது.

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண் ... இல்லம் ...

மத்திய கிழக்கு

வல்லரசுகளிடையே நிலவிவரும் போட்டியின் காரணத்தால் ஏற்கெனவே ஒன்றுபட்டிருந்த அரபு லீக் (மத்திய கிழக்கு) நாடுகளிடையேயும் ஒற்றுமை குலைந்து சீரழிவு ஏற்பட்டிருப்பதைக் காண முஸ்லீம் உலகின் நெஞ்சம் புண்படுகின்றது என்பதை நாம் கூறவேண்டியதில்லை. இக்காறும் என்றுங் காணாத அளவு கொந்தளிப்புடையதொரு நெருக்கடி முளைத்திருக்கிறது அந்தப் பிராந்தியத்தில்.

ஜோர்தானில் உள்ள எகிப்திய ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த சிலர், ஜோர்தான் அரசாங்கத்திற்கு விரோதமாகச் சதி செய்தனர் என்ற சந்தேகத்தின் காரணமாக அவர்களை ஜோர்தான் வெளியேற்றிவிட்டது. இதற்குப் 'பதில் நடவடிக்கை' என்ற முறையில் எகிப்து அரசாங்கம் தலைநகரான கெய்ரோவிலிருந்த ஜோர்தான் ஸ்தானிகரை வெளியேற்றியது. ஜோர்தானுக்குப் பிரிட்டன் அளித்துவந்த உதவிக்குப் பதிலாகத் தாங்கள் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட உதவியையும் நிறுத்திவிட எகிப்தும், சிரியாவும் முடிவு செய்தன. பிரிட்டனுடன் ஜோர்தான் 1948-ஆம் ஆண்டில் செய்து கொண்ட ஒப்பந்தப்படி அந்நாட்டிடமிருந்து பொருளுதவி பெற்றுவந்த ஜோர்தான் தன் சகநாடுகளாகிய எகிப்து, சிரியா, சவுதி அரேபியா நாடுகள் அளித்த வாக்குறுதிகளில் நம்பிக்கைக் கொண்டு, பிரிட்டனின் நிதி உதவியை ஏற்க மறுத்ததுடன் அதனுடன் தொடர்பையும் குறைத்துக் கொண்டது. இதனால் ஜோர்தானின் அரசியல் அமைப்பில் பல சிக்கல்கள் தோன்றி மறைந்தன. இறுதியாக மன்னர் ஹுசைன், தம் நாட்டில் கம்யூனிசச் செல்வாக்கு பரவாமல் தடுக்க உறுதிகொண்டபின், சிரியாவும் எகிப்தும் தங்கள் பொருளுதவியைநிறுத்திவிட முடிவு செய்ததால், எகிப்தில் உள்ள தமது ஸ்தானிகராலயத்தையே மூடிவிடுமாறு உத்தரவிட்டார். இதுபோன்றே எகிப்தும் பதில் நடவடிக்கையை மேற் கொண்டது. நாட்டிலிருந்துள்ள வெளியேறுதலாலும், எகிப்து மீது தமக்குள்ள வெறுப்பினாலும் எகிப்தைச் சேர்ந்த தம்மனைவியைக் கூட விவாகரத்துச் செய்யத்தயங்கவில்லை மன்னர் ஹுசைன்!

மேற்கூறப்பட்டவாறு அரபு நாடுகளிடையே ஒற்றுமை மறைக்கசப்பு ஏற்பட்டிருப்பதற்குரிய மற்றொரு முக்கியகாரணம் ரஷ்யா, சூயஸ் போரின் போது எகிப்துக்கு ஆதரவளித்ததால் மத்திய கிழக்கில் தனக்கேற்பட்ட செல்வாக்கைக் கொண்டு மத்திய கிழக்கு நாடுகளையெல்லாம், தனது ஆதிக்கத்திற்குள் கொண்டுவர முயற்சித்ததேயாம். இதுபோன்றே பிற முஸ்லீம் நாடுகளுக்கெல்லாம் தானே தலைமையாக அவைகளைத் தனது ஆதிக்கத்தின் கீழ் அகண்ட இஸ்லாம் மயமாகச் செய்ய எகிப்து நினைவு கொண்டிருப்பதும் இதற்கு காரணமாக கூறலாம். இதன் காரணமாகவே அரபு லீக் தலைமைக் காரியாலயத்தை முன்னெச்சரிக்கையாகத் தனது நாட்டிலேற்படுத்திக் கொண்ட எகிப்து, அடிக்கடி எல்லா முஸ்லீம் நாடுகளின் அதிபர்களையும் வரவழைத்து, அவர்களைத் தன்பால் ஈர்க்க ஆலோசனைகள் நடத்தி வந்தன. அந்த சமயத்தில் அதே முஸ்லீம் நாடுகளுக்கெதிராக எகிப்தில் சதி செய்யப்பட்டதென்பதையும் இங்கு குறிப்பிடாதிருக்க முடியவில்லை.

அரபு நாடுகளுக்கிடையே பிளவு ஏற்பட்டிருப்பதன் முக்கிய காரணங்களை நாம் ஒருவாறு மேலே விளக்கி இருக்கிறோம். இந்த பிளவால் ஜோர்தான், சவுதி அரேபியா, ஈராக், லெபனன் ஆகிய நாடுகள் ஒரு கட்சியாகவும், எகிப்து, சிரியா, யேமன் ஆகியநாடுகள் எதிர்க்கட்சியாகவும் பிரிந்து அமைந்திருக்கின்றன. முஸ்லீம் நாடுகளிடையே இவ்வாறு பிளவு ஏற்பட்டிருப்பது விரும்பத்தகாதது.

—"நூருல் இஸ்லாம்"